CASH FOR GOLD
R-GOLD
EXCHANGE
Mob: 93457 93457


# THE KOVAI HERALD

தி கோவை ஹெரால்டு

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 36 | English & Tamil Weekly | 8-2-2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-


CASH FOR GOLD
R-GOLD
EXCHANGE
Mob: 93457 93457




# வெள்ளியங்கிரி மலையில்
# இயற்கைக்கு மாறாக செயல்பட வேண்டாம்
## கோவில் அறங்காவலர் குழு தலைவர் சிவகணேஷ் வேண்டுகோள்

தி கோவை ஹெரால்டு



தென் கைலாயம் என்று அழைக்கப்படும் வெள்ளியங்கிரி மலையில் வீற்றிருக்கும் வெள்ளியங்கிரி ஆண்டவர் சுயம்பு லிங்கத்தை தரிசிக்க, வருடம் தோறும் 3 மாத காலம் பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

பிப்ரவரி 1 தேதி முதல் மே31ஆம்தேதிவரை மலையேற அனுமதி தரப்பட்டு இருக்கும் காலத்தில், உலகம் முழுவதும் இருந்து ஏராளமான சிவ பக்தர்கள் குவிவது வழக்கம்.

இந்த நிலையில், கடந்த பிப்ரவரி 1-ம் தேதி காலை வெள்ளியங்கிரி பூண்டி ஆண்டவர் கோயில் அடிவாரத்தில் மலைப் பாதையில் பூசையுடன் கதவு திறக்கப்பட்டது. அப்பொழுது பக்தர்கள் சிவ நாமம் உச்சரித்தபடி மலையேறினர். அரோகரா என பக்தி முழக்கங்களை எழுப்பினர். முதல் மலையில் வெள்ளை பிள்ளையார் துவங்கி இடையில் சுனை நீர் குளியல் செய்து அனைத்து மலைப்பகுதிகளிலும் வீற்றிருக்கும் தெய்வங்களை வழிபட்டு பின்பு வெள்ளியங்கிரி ஆண்டவர் சுயம்புலிங்கம் எழுந்தருளிய ஏழாவது மலைக்கு செல்வார்கள். மலை பாதையில் உணவு மருத்துவ வசதி உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதோடு, பக்தர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு இருக்கின்றன.

இதுகுறித்து பேசிய பூண்டி வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயில் அறங்காவலர் குழுதலைவர் சிவகணேஷ் கூறியதாவது, "வெள்ளியங்கிரி ஆண்டவர் பக்தர்களின் பெருத்த எதிர்பார்ப்பு இடையில் இன்று மலையேற்றம் தொடங்கியுள்ளது. முதல் நாளே பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் மலை ஏறினர்.

பக்தர்களின் தேவைக்கு ஏற்ப மருத்துவ வசதி, உணவு தண்ணீர் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையேறும் பக்தர்கள் காலணியை அணிந்து மலையேறக்கூடாது. கட்டுப்பாடுகளை கடைபிடிக்க வேண்டும்.

கடந்த ஆண்டு பக்தர்கள் வீசிய 12 டன் நெகிழி குப்பைகளை மலைப்பகுதிகளில் இருந்து சேகரித்து அப்புறப்படுத்தியுள்ளோம். எனவே, பக்தர்கள் நெகிழி பைகளை பயன்படுத்த வேண்டாம் .

அதே போன்று தண்ணீர் பாட்டில்களையும் மீண்டும் அடிவாரம் கொண்டு வர வேண்டும். துணி உள்ளிட்டவற்றை மலையில்விட்டுவரக்கூடாது பக்தர்கள் மலைப்பகுதியில் தேவையற்ற பொருட்கள் மற்றும் எளிதில் காடுகளில் தீப்பிடித்துக் கொள்ளும் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டாம்.

காட்டுப் பகுதியில் இயற்கைக்கு மாறாக செயல்பட வேண்டாம். தற்போதுள்ள வளத்தை அடுத்த தலைமுறைக்கும் அப்படியே கொண்டு செல்வது நமது கடமை.

வனவிலங்குகள் நடமாட்டம் உள்ள இம்மலைப் பகுதிகளில் பக்தர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

பக்தர்களின் பாதுகாப்புக்கும் தேவைக்கும் ஏற்ப வனத்துறையுடன் இணைந்து பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

மலையடிவாரத்தில் உள்ள கடைகளில் அறங்காவலர் குழுவினர் மற்றும் அதிகாரிகள் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்பொழுது தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பைகளில் பொருட்கள் விற்கப்படுவதை கண்டு பிடித்து அப்புறப்படுத்தினர். இந்த கடைகளுக்கு உடனடியாக நோட்டீசும் அளிக்கப்பட்டது. நெகிழி பைகளை விற்கும் கடைகளின் உரிமம் ரத்து உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அறங்காவலர் குழுதலைவர் சிவகணேஷ் எச்சரித்தார்.

# 'தூயசக்தி' விஜய் அம்பலப்பட்டு நிற்கிறார்
## அரசியல் விமர்சகர் கருத்து

தி கோவை ஹெரால்டு

■ ந.பாலகிருஷ்ணன்



தூயசக்தி என்று தன்னை தானே அழைத்து வந்த விஜய் இப்போது அம்பலப்பட்டுவிட்டதாக மூத்தபத்திரிகையாளர்தராசு ஷ்யாம் விமர்சித்துள்ளார். வருமானவரித்துறைவிதித்த ரூ.1.5 கோடி அபராதம் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு, அரசியல் ரீதியாக விஜய்க்கு மிகப்பெரிய பின்னடைவு என்றும் தெரிவித்துள்ளார்.

புலி படத்தில் நடித்ததற்கு வாங்கிய ரூ.15 கோடி சம்பளத்தை கணக்கில் காட்டாமல் வரி ஏய்ப்பு செய்ததாக விஜய் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து வரி ஏய்ப்பு செய்ததாக விஜய்க்கு வருமான வரித்துறை தரப்பில் ரூ.1.5 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. 2022 ஜூன் 30ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் விஜய் வழக்கு தொடர்ந்தார்.இதனிடையே ஆவணங்களை வருமான வரித்துறையினர் ஆய்வு செய்த போது ரூ.15 கோடி வருமானத்தை கணக்கில் காட்டாதது கண்டுபிடிக்கப்பட்டது. இதன்பின்விஜய்தொடர்ந்து வழக்கின் விசாரணையின் போது வருமான வரித்துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது விஜய் தரப்பில் கால தாமதமாக அபராதம் விதிக்கப்பட்டதாக வாதிடப்பட்டது.இறுதியாக விஜய்க்கு விதிக்கப்பட்ட ரூ.1.50 கோடி அபராதம் செல்லும் என்று தீர்ப்பளித்த சென்னைஉயர்நீதிமன்றன், விஜய்யின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இது அரசியல் தளத்தில் விஜய்க்கு மிகப்பெரிய பின்னடைவாக மாறியுள்ளது. இதுகுறித்து மூத்த பத்திரிகையாளர் தராசு ஷ்யாம் பேசுகையில், 'தூய சக்தி இப்போது அம்பலப்பட்டு போய் நிற்கிறது. வருமான வரி என்பது தனிநபர் சார்ந்தது. வருமான வரித்துறை வழக்கு என்பது அபராதம், அபராதத்திற்கான வட்டி உள்ளிட்டவற்றை செலுத்திவிட்டு எதிர்கொள்வதே சரியாக இருக்கும். வருமான வரித்துறை உள்ளாகவே இரு வகையான அப்பீல் உள்ளது. விஜய் நட்சத்திரமாக இருந்த போது, இந்த சம்பவம் நடந்துள்ளது. இதன்பின் வழக்குக்கு சென்றார். தொடர்ந்து அரசியலுக்கு வந்தார். அரசியலுக்கு வந்த பின் சினிமாவின் உச்சத்தை விட்டுவிட்டு வந்துள்ளேன் என்ற ஒரு பில்டப் இருந்தது. தற்போது நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு அரசியல் கட்சித் தலைவருக்கு எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்பாகவே கருதப்படும்.இதனால்விஜய் கூறி வந்த தூயசக்தி என்ற பிம்பம் உடைக்கப்பட்டு, விஜய் ஒரு மாயசக்தி என்று விமர்சனங்கள் வைக்கப்படும். இது அரசியல்வாதி விஜய்க்கு மிகப்பெரிய பின்னடைவு.

பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர் தங்களை தூய்மையானவர்களாக வைத்துக் கொள்ள வேண்டும். தூய சக்தி என்றால் நாம் அதனை நிரூபிக்க வேண்டும். விஜய் மீதுஅரசைஏமாற்றியகுற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் விஜய்யின் வீட்டில் நடந்த ரெய்டு அடிப்படையில், வருமானத்தைமறைத்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் கருப்புப் பணம் என்ற விமர்சனத்தை முன் வைத்து வரும் அதிமுக இன்னும் அதிகமாக தாக்கும்.

அதேபோல், விஜய் வெறும் வாய் சொல் வீரர் என்ற திமுகவின் வாதம் எடுபட தொடங்கும். அரசியலுக்கு வந்த பின் விஜய்இந்தவழக்கைவாபஸ் பெற்றிருக்க வேண்டும். இந்த விவகாரத்தை திமுக கையில் எடுக்கும். இதனை எதிர்த்து விஜய் மேல்முறையீடு செய்வார் என்று தெரிவித்துள்ளார்.






# Celebrate Life Not Just Festivals

THE KOVAI HERALD



**Sadhguru:** All of us usually plan many things for the festival season, but we will not be able to do those things now because of the pandemic. Many of us are stuck all over the world, unable to meet family. Maybe we have to curtail our external celebrations quite a bit, but that does not mean we have to curtail the celebratory nature of our lives.

We are in the midst of very challenging times. When a situation is serious, you do not have to become serious. "If I am not serious, does it mean to say I am going to be frivolous?" No, you are just going to be joyful, responsible and sensible. Such a human being can deal with situations much better than those who are dead serious about everything. There is substantial data to show that if a person is exuberant, joyful and wonderful, their immune system is always functioning at a better level of protection than those who are depressed and worried about something.

### A Culture of Celebration

In the Indian culture, there was a time when there used to be a festival every day of the year 365 in a year because a festival is a tool to bring life to a state of exuberance and enthusiasm. The whole culture was in a state of celebration. If today was ploughing day, it was a kind of celebration. Tomorrow was planting day, another kind of celebration. Day after tomorrow was weeding, that was a celebration. Harvesting, of course, is still a celebration. The idea behind this was to make our whole life into a celebration. Making each day a cause for celebration brought joy into everyday life. Without this dimension of joy, life often turns burdensome.

Even if there was an impending calamity, in this country we confronted that also in a celebratory mode. That is the nature of this culture. Many historians who traveled to this country have recorded in the past, that even when wars were going on, farmers were still tilling the land, women were going about doing their chores, people continued going to temples and celebrating festivals that is how we have always been.

If you approach everything in a celebratory way, you learn to be non-serious about life but absolutely involved. The problem with most human beings right now is, if they think something is important, they will become dead serious about it. If they think it is not so important they will become lax about it they do not show the necessary involvement. Life will bypass them because with anything that they think is not serious, they are unable to show involvement and dedication towards that. That is the whole problem. The passage, the secret of life is in just this seeing everything with a non-serious eye, but absolutely involved like a game. That is the reason the most profound aspects of life are approached in a celebratory way so that you don't miss the point.

### Time to Bring Forth Your Exuberance

You cannot experience life unless you keep yourself as intense and exuberant as possible. A festival just provides you with an excuse to celebrate, but celebration should not be limited to a particular occasion. Your whole life, your very existence should become a celebration, not just during a festival. That is how you should be every moment of your life exuberantly alive. What is the point in being half alive? We did not come here to avoid life, we came to know and experience life.

If your life has to become a celebration, you have to become absolutely joyful within yourself. And this is not just empty talk such a thing is possible. There is a whole science through which you can create the right kind of chemistry within yourself to become joyful by your own nature. As there is a science and technology to create external situations the way we want, there is a technology for inner wellbeing that can be employed to create your inner situations the way you want. It is time we understand that when there are external challenges, it is very important that we do not let our own thoughts and emotions turn against us.

This is the time to bring forth our exuberance and let life flow in full terms of activity, but by overflowing with joy and liveliness. But above all, it is very important that celebration does not mean people getting together. The important thing is social distancing. How we conduct ourselves will decide how many millions of lives are lost or saved.

It is my wish and my blessing that everyone should make use of this festival season to transform themselves into joyful, wonderful and impactful human beings in the world.

# Sri Ramakrishna Hospital Doctors Save Patient after Six-Hour Surgery



Doctors at Sri Ramakrishna Hospital successfully performed a high-risk, six-hour multidisciplinary surgery to save the life of a patient suffering from a critical airway obstruction caused by a massive tumour.

The patient was admitted to the hospital with severe breathlessness and was dependent on continuous oxygen support even while at rest. Detailed medical evaluation revealed a large tumour compressing the thoracic trachea from both sides. The initial phase of care was led by Consultant Interventional Pulmonologist Dr. Arun Gangadhar, who carefully optimised the patient's respiratory function. The definitive surgical procedure was carried out under the leadership of Senior Consultant Cardiothoracic Surgeon Dr. Rampprassath, along with an experienced surgical team.

The surgery was further complicated by the tumour's location, as it was firmly attached to the spine and compressing the windpipe on both sides. To address this critical challenge, Senior Consultant Neurosurgeon Dr. Vikram Muthusubramanian joined the procedure. The patient was closely monitored by the anaesthesia team comprising Dr. Narendran Menon, Dr. Manikandan, and Dr. Ashok Hariharan.

Following the procedure, the patient made a remarkable recovery.

Dr. Sundar Ramakrishnan, Managing Trustee of Sri Ramakrishna Hospital, congratulated the medical team for accomplishing this rare and complex surgery. The team was also appreciated by C. V. Ramkumar, Chief Executive Officer; Mahesh D., Chief Administrative Officer; Dr. S. Rajagopal, Medical Director; and Dr. S. Alagappan, Medical Superintendent.

# Amrita Vidyalaya lifts the ITC Inter-School Recycling Championship




THE KOVAI HERALD

Amrita Vidyalaya, Kalapatti collected 9.3 tons of dry recyclable waste to lift the ITC Inter-School Recycling Championship.

S.N. Umakanth, Deputy General Manager - WOW, ITC Limited, Paperboards and Specialty Papers Division Sanket Balwant Waghe, Additional Collector (Development) and Project Director, District Rural Development Agency, Coimbatore took part as the Chief Guest of the event and gave away the prizes to the best performing students and institutions. He then gave away the awards to the winners, best performers and participants jointly with G.Mahindhar Babu, Unit HR Head- Chief Manager, ITC Limited - Paperboards and Specialty Papers Division; V.Murali, Unit Head, Coimbatore, ITC Limited - Paperboards and Specialty Papers Division; C.Balasubramaniam, President, R.Raveendran, Vice President, RAAC and V.Ravichandran, Project Manager, RAAC-WOW.

At the award ceremony, Amrita Vidyalaya Sr.Secondary School, Kalapatti, Coimbatore was announced the Champion for collecting 9,300 kg (9.3 tons) of dry recyclable waste.

# Nehru Arts and Science College Signs MoU with INTI International University



THE KOVAI HERALD

Nehru Arts and Science College, Coimbatore, has signed a Memorandum of Understanding (MoU) with INTI International University, Malaysia, to enhance academic collaboration, research exchange, and global learning opportunities.

The partnership will facilitate joint research initiatives, faculty and student exchange programmes, curriculum development, and interdisciplinary knowledge sharing.

The MoU is seen as a significant step towards strengthening international academic engagement and institutional growth for both institutions.

# Deadline Extended for Registering Child's Name in Birth Certificates

The Coimbatore Corporation has extended the deadline for registering the name of children born in 2009 and earlier in their birth certificates.

In a press release, the Corporation stated that as per the Tamil Nadu Births and Deaths (Amended) Registration Rules, 2000, the time limit for entering a child's name in birth records for those born in or before 2009 has been extended up to September 26.

Parents or guardians who have not yet registered the child's name can apply at the Coimbatore Corporation main office by submitting details of the child's name, date of birth, and a copy of any supporting document containing the date of birth.

A late registration fee of ₹200 will be collected for the process.

The Corporation has urged eligible applicants to make use of the extended deadline and obtain the corrected birth certificate within the stipulated time.

# Coimbatore School Students Launch Stray Dog Sterilisation Drive

Two school students from Coimbatore have launched a stray dog sterilisation drive under the ethical CatchNeuter Return (CNR) method to humanely control the street dog population.

Advaith Rao and Amritha Ramesh, founders of the student-led Chikoo Project, initiated the programme with guidance from Humane Animal Society (HAS), Pawsome People Project (PPP), and SPCA, and financial support



from the Rotary Club of Coimbatore Central.

The project was launched at the Cosmopolitan Club, Race Course, where Rotary officials handed over Rs.5 lakh to support the initiative. Volunteers from PPP will humanely catch the dogs.

# India's Largest Backyard Ultra Marathon Flags Off at Kumaraguru campus



The second edition of the Coimbatore Backyard Ultra (CBU), India's largest Backyard Ultra Marathon, began at the Kumaraguru Institutions campus with runners from across the country taking part.

Participants must complete a 6.7-km loop every hour, on the hour. Those who fail to finish within 60 minutes or miss the next start are eliminated. The race continues nonstop until one runner remains. The winner will receive ₹25,000. This year's event is a designated "Silver Ticket" race, with the champion qualifying to represent Team India at the World Team Championship later this year.

Organisers expect fierce competition, with athletes aiming to surpass the national record of 52 hours. The inaugural edition last year was won by Santhosh, who ran for 37 hours, covering nearly 248 km.

The event, conceived by Kumaraguru alumni Prem SB, Nithin SS, and Jeeva Prasanth of Battlegrounds Coimbatore, features full medical support, recovery facilities, and team and shorter-distance categories, testing endurance, discipline, and mental strength.

# KVIM Conducts "UNLEASH @ KVIM" Experiential Leadership Training Program




The KV Institute of Management and Information Studies (KVIM), Coimbatore, in collaboration with National College, Tiruchirappalli, successfully organized an Experiential Leadership Training Program titled "UNLEASH @ KVIM" at the KVIM Campus.

The session was led by Raja K, Assistant Professor and Outbound Trainer, KVIM, who served as the Resource Person for the program. Students from National College actively participated with great enthusiasm, making the program highly engaging and impactful. The experiential approach enabled students to connect theoretical leadership concepts with practical application, thereby enhancing their confidence and leadership mindset.

# Gnana Udhayam Launched To Strengthen Family Values And Self-Discipline

Sri Sasikumar, founder of Gnana Sanjeevi Gurukulam, launched the social organisation "Gnana Udhayam" (Awakening of Wisdom) at the Swami Vivekananda Youth Club in Koundampudhur, Coimbatore.

Dr. Kavidasan, Director, Coimbatore Roots Company; Sampathkumar, Managing Director, Sulur Simta Clear Boards Private Limited; G. Vanashree, Founder and Chief Innovation Officer, Velga Learning Solutions; Sri Sasikumar; and Kavitha Sri Mohanarangan, Administrative Manager, Gnana Sanjeevi Gurukulam were the guest on the occasion of the launch.

FOR NEWS Publication
9244317182
04223147962



# கோவையில் அதிமுக என்ற பிரமாண்ட கப்பலின் 'நங்கூரம்' எஸ்.பி.வேலுமணி



## விடியா ஆட்சி - உங்கள் வீட்டு பில்லே சாட்சி எஸ்.பி. வேலுமணி தீவிர பிரசாரம்

திமுக ஆட்சியின் அவலங்களை வீடுதோறும் கொண்டு சேர்க்கும் பொருட்டு, 82 மாவட்டக் கழகங்களும், தகவல் தொழில்நுட்பப் பிரிவும் இணைந்து, திமுக ஆட்சிக்கு எதிராக, "ஆட்சி உங்கள் வீட்டு பில்-லே சாட்சி" என்ற தலைப்பில், ஒவ்வொரு பூத் வாரியாக அதிமுக ஆட்சிக் காலத்தையும், திமுக காலத்தையும் ஒப்பிட்டு, மக்களிடம் கொண்டு செல்லும் பணியை அதிமுகவினர் மேற்கொண்டுள்ளனர்

கோவை சுண்டக்காமுத்தூர் பகுதியில் கோவை புறநகர் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் சார்பில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மக்களிடம் கலந்து உரையாடினார். தொடர்ந்து பேசிய அவர், 'முன்னாள் முதல்வர் அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடியாரின் வழிகாட்டுதலின் பேரில், தொண்டாமுத்தூர், சட்டமன்ற தொகுதி, சுண்டக்காமுத்தூர் பகுதியில், மக்களிடம் விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளேன். மக்களுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக கூறி, விலைவாசி உயர்வால் பல இலட்சம் ரூபாயை செலவாக சுமையாக்கியுள்ளார்கள். இதை ஆதாரத்துடன் மக்களை சந்தித்து அவர்களிடமே, அவர்களின் செலவுகள் குறித்து கேட்டறிந்து, ஆதாரத்துடன் மக்களிடம் காட்டுவதால் பெரிய அளவில் வரவேற்பு கிடைத்து வருகிறது என்றார்".

தி கோவை ஹெரால்டு
■ க.அபிராமி

கோவை மாவட்டத்தை எப்படியாவது பிடித்து விட வேண்டுமென்று திமுக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. ஆனால், இந்த மாவட்டத்தில் அதிமுக என்ற பிரமாண்ட கப்பலுக்கு நங்கூரமாக இருப்பவர் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி. இவரை, மீறி கோவையில் திமுக வெற்றி பெற்று விட முடியுமா? என்கிற கேள்வி எப்போதுமே உண்டு. அந்த அளவுக்கு கோவை மக்களிடத்தில் செல்வாக்கு மிக்கவர் எஸ்.பி. வேலுமணி. இதனால், திமுகவால் கொங்கு மண்டலத்தில் அதிமுக கட்சியை அசைத்து கூட பார்க்க முடியவில்லை. கடந்த அதிமுக ஆட்சியில் கொங்கு மண்டலத்திற்கு தேவையான அனைத்து திட்டங்களையும் அரும்பாடுபட்டு எஸ்.பி வேலுமணி கொண்டு வந்துள்ளார். கோவை மாவட்டத்தில் கடந்த 50 ஆண்டுகளில் யாரும் செய்யாத திட்டங்களை, எஸ். பி. வேலுமணி 5 ஆண்டுகளில் செய்துமுடித்து, சாதனை படைத்துள்ளார். அவர் செய்துள்ள திட்டப் பணிகள் என்னவென்று பார்க்கலாம்.

கோவைசர்வதேசவிமானநிலைய விரிவாக்கத்துக்கு வித்திட்டார்.

ரூ.320 கோடி மதிப்பில் கோவை மேற்கு புறவழிச்சாலை திட்டம் கொண்டு வந்தார்.

ரூ.230 கோடியில் நொய்யல் ஆறு சீரமைப்புத் திட்டம் அமல்படுத்தினார்

ராணுவ தளவாட பாதுகாப்பு பூங்கா அமைக்க உதவினார்.

ரூ.290 கோடி மதிப்பில், உலகத்தரத்தில் அரசுமருத்துவக் கல்லூரிமருத்துவமனை மேம்பாடு செய்யகாரணகர்த்தாவாக இருந்தார்.

கோவை - அவிநாசி சாலையில், உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை ரூ.1,621 கோடி மதிப்பில் தமிழகத்திலேயே மிக நீளமான உயர்நிலை மேம்பாலம் அமைய முழு முதல் காரணமும் இவரே.

ரூ.215 கோடி மதிப்பில் கோவை ஆத்துப்பாலம் முதல் ஒப்பணக்கார வீதி வரை உயர்நிலை மேம்பாலம் அமைக்கவும் இவர்தான் காரணம்.

ரூ.195 கோடி மதிப்பில் காந்திபுரம் இரண்டு அடுக்கு மேம்பாலம் எஸ். பி. வேலுமணியின் முயற்சியால் அமைந்தது.

திருச்சி சாலை மேம்பாலம் அமைய முதல் காரணமாக இருந்தார்.

ரூ.1,500 கோடியில் ஸ்மார்ட் சிட்டி திட்டப் பணிகள் செய்தார்.

புதிதாக 5 அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் தொடங்க வித்திட்டார்.

ரூ.19 கோடி மதிப்பில், நிர்வாக வசதிக்காக கோட்டாட்சியர் மற்றும் தாலுக்கா அலுவலகங்கள் இவரின் முயற்சியால் அமைக்கப்பட்டது.

கோவையின் முக்கிய சாலைகள் அனைத்தும் நான்கு வழிச்சாலைகளாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

ரூ.1,652 கோடி மதிப்பில் அத்திக்கடவு-அவிநாசி கூட்டுக் குடிநீர்த்திட்டம் கொண்டுவரப்பட்டது.

ரூ.779.86 கோடி மதிப்பில் பில்லூர் மூன்றாவது கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரப்பட்டது.

ரூ.130.47 கோடி மதிப்பில் பவானி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் குடிநீர்த் திட்டம் உருவாக்கப்பட்டது.

குறிச்சி - குனியமுத்தூர் ஆழியாறு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

மக்கள் பயன்பாட்டுக்காக கோவை பேரூர் படித்துறையில் 15 கோடி செலவில் தர்ப்பண மண்டபம் கட்டி கொடுக்கப்பட்டது.

கோவை மாவட்ட மக்களிடம் மிகவும் எளிமையாக பழகும் தன்மை கொண்ட எஸ்.பி. வேலுமணிக்கு இளைஞர்களிடத்திலும் கடும் செல்வாக்கு உண்டு. கிரிக்கெட் போட்டிகள், விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று இளைஞர்களை உற்சாகப் படுத்துவதில் எஸ்.பி. வேலுமணிக்கு நிகர் இவரே.

# கோவையில் 17 நிஜ ஹீரோக்களுக்கு அலெர்ட் பீயிங் விருதுகள்



கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் கே.பி. ராமசாமிக்கு 'அலர்ட் எமினன்ஸ் விருதை கல்வியாளர் பி.கே. கிருஷ்ணராஜ் வானவராயர் வழங்கினார். உடன் அலர்ட் கோவை மண்டல செயற்குழு உறுப்பினர்களான ரூட்ஸ் இயக்குனர் டாக்டர் சந்திரசேகர், பி.எஸ்.ஜி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயக்குனர் டாக்டர் ஜே.எஸ். புவனேஸ்வரன் மற்றும் சாண்ட்பிட்ஸ் பவுண்டரீஸ் நிர்வாக இயக்குனர் சரவணன் ரங்கநாதன், அலர்ட் அமைப்பின் இணை நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான ராஜேஷ் திரிவேதி

நாடுமுழுவதும்பல்வேறு சேவைகள் மூலம் நிஜ ஹீரோக்களாக திகழும் 17 பேருக்கு கோவையில் அலெர்ட் அமைப்பின் சார்பில் விருதுகள் வழங்கப் பட்டன. சேவை மனப் பான்மையுடன் செயல் படுதல், பிறருக்கு உதவுதல் உள்ளிட்ட சமூகம் சார்ந்த பணிகளை மேற்கொள்ளும் தனி நபர்கள் மற்றும் அமைப்புகளை கவுர விக்கும் விதமாக அலெர்ட் அமைப்பு சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின் றன. இதில், சத்யார்த்தி இயக்கத்தின் நிறுவனரும், நோபல்பரிசுபெற்றவருமான கைலாஷ் சத்யார்த்திக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

மேலும், பிரஜ்வலா அமைப்பின் இணை நிறு வனர் சுனிதா கிருஷ்ண னுக்கும், தொழில் வளர்ச் சியை ஊக்குவித்ததற்காக கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் ராமசாமிக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், தன்னை விட மூத்த மாணவன் கிணற்றில் விழுந்து உயிருக்கு போராடுகையில், அவரை காப்பாற்றிய கோவை கண்ணம்பாளையம் அரசுப் பள்ளி 9ம் வகுப்பு மாணவன் மணீஷ்க்கும், ஜான்சி ரயில் நிலையத்தில் கர்ப்பிணிக்கு உதவிய ராணுவ மேஜர் ரோஹித்திற்கும் விருதுகள் வழங்கப்பட்டன. இந்த விருதுகளை கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார், சமூக ஆர்வலர்கள் மற்றும் தொழிலதிபர்கள் வழங்கினர். அலர்ட் அமைப் பின் தலைவர் மைக் முரளி தரன், நிறுவன அறங்காவலர் கலா பாலசுந்தரம்,

அலர்ட் அமைப்பின் இணைநிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான ராஜேஷ் திரிவேதி ஆகியோர் உடனிருந்தனர்.

# தாஜ்மகாலுக்கு முன்னரே ராஜேந்திர சோழன் தமிழகத்தில் உருவாக்கிய காதல் சின்னம்




தாஜ்மஹாலுக்கு முன்பாகவே கட்டப்பட்ட ஒரு காதல் சின்னம் உள்ளது. இந்த காதல் சின்னம் ராஜேந்திர சோழனால் அமைக்கப்பட்டது.

சோழ வரலாற்றின் புகழை உச்சிக்கு கொண்டு சென்ற ராஜேந்திர சோழன். ராஜராஜ சோழனின் மகனான ராஜேந்திர சோழன், கி.பி. 1012-ஆம் ஆண்டு முதல் 1044-ஆம் ஆண்டு வரை மன்னராக இருந்தவர். இவருக்கும் திருவாரூரைச் சேர்ந்த ஆடல் அழகிக்கும் இடையே இருந்த காதல் பலருக்கும் தெரியாதது. முதலாம் ராஜேந்திரன் கங்கையையும் கடாரத்தையும் வென்று உலகளாவிய பல வெற்றிகளை பெற்ற மாமன்னன்.

உலகத்தை வென்ற இவனது உள்ளத்தை வெற்றி கொண்ட காதலியாக திகழ்ந்தவர் தான் திருவாரூரை சேர்ந்த ஆடல் அழகி பரவை நங்கை.

இவர் ஆடல் பாடல் மட்டுமல்லாது இறை பணியிலும் தன்னை ஈடுபடுத்தி கொண்டவர். தனது காதலி பரவை நங்கைக்காக ராஜேந்திர சோழன் கட்டிய கோவில்தான் திருவாரூர் தியாகேசர் கோவிலுக்குள் அமைந்துள்ள ராஜேந்திர சோழீஸ்வரம் என்ற கோவில் ஆகும்.

பரவை நங்கையாரின் விருப்பப்படி ராஜேந்திரன் தனது பதினாறாம் ஆட்சி காலத்தில் கி.பி. 1028-ம் ஆண்டு தொடங்கி கி.பி. 1130 ம் ஆண்டு கற்கோயிலாக கட்டி முடித்தார்.

கற்கோயிலாக அமைத்ததுடன் மட்டுமல்லாது அந்த கோவிலின் வெளிப்புறம் தொடங்கி கலச பகுதி வரையில் வாயில் உட்புறம் முழுவதும் பொன் வேய்ந்தான். கருவறை கதவுகளுக்கும், முன்புற தூண்களுக்கும் செம்பினால் தகடு சாத்தினான். இதற்காக 20.643 கழஞ்சு (1 கழஞ்சு=5.4 கிராம்) பொன்னும், 42.000 பலம் செம்பொன்னும் செலவிடப்பட்டதாக கல்வெட்டு தெரிவிக்கிறது. பரவை நங்கை விடுத்த கோரிக்கையின்படி, கட்டி முடிக்கப்பட்ட கோவிலுக்கு குடமுழுக்கு விழா நடந்தது. அப்போது, ராஜேந்திரன் தன் அருகில் அவளை அமரச் செய்து தேரில் பவனி வந்தான். இவர்கள் இருவரும் இறைவனை தரிசித்த இடத்தில் ஒரு குத்துவிளக்கு ஒன்றை பரவை நங்கை நினைவாக ஏற்றினாள். இதனை ராஜேந்திர சோழனின் கல்வெட்டு 'உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அனுக்கியர் பரவை நங்கையாரும் நிற்குமிடத் தெரியும் குத்து விளக்கொன்றும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் சிங்காநல்லூர் எம்.எல்.ஏ. கே.ஆர்.ஜெயராம்



கோவை சிங்காநல்லூர் அன்னை சத்யா நகர் பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்க பணிகளை சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம் துவக்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, முன்னாள் முதல்வர்கள் எம் ஜி ஆர், ஜெயலலிதா ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே ஆர் ஜெயராம் வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் சிவக்குமார், வட்ட செயலாளர் விஜயராகவன், சிவக்குமார், குமரேசன், சந்திரசேகர், சசிகுமார், எஸ்.எம். ராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சபரிமலைக்கு ரயில் பாதை அமைக்க கேரள அரசு ஒப்புதல்

அங்கமாலி - எருமேலி சபரிமலை ரயில் பாதை திட்டத்துக்கு, பச்சைக் கொடிகாட்டிய கேரள அரசு, 50 சதவீதம் நிதி வழங்கவும் ஒப்புதல் அளித்துள்ளது. ஐயப்பன் வீற்றிருக்கு சபரிமலை செல்வோருக்கு வசதியாக, கேரள மாநிலம் அங்கமாலி - எருமேலி இடையே, 110 கி.மீ., துாரம் சபரிமலை ரயில் பாதை அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கமாலியில் இருந்து பெரும்பாவூர், மூவாத்துப்புழா, தொடுபுழா மற்றும் பாலா போன்ற நகரங்கள் வழியாக இந்த பாதை அமையும். முதல் கட்டத்தில், 8 கி.மீ., துாரத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிந்துள்ளன. நிலம் கையகப் படுத்துவது, நிதி ஒதுக்கீடு செய்வது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், இந்த திட்டம் முடங்கியது. பல ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டதால், இந்த திட்டத்தின் மொத்த செலவு, 3,800 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், 'இந்த ரயில் பாதை திட்டத்துக்கு மொத்த செலவில், 50 சதவீதம் பங்களிக்க வேண்டும். கேரள அரசு, நிலங்களை உடனடியாக கையகப்படுத்த வேண்டும்' என, மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்திருந்தார். இதையடுத்து, சபரிமலை ரயில் பாதை திட்டத்தை செயல்படுத்த, கேரள அரசு ஒப்புதல் கொடுத்ததோடு, திட்ட செலவில், 50 சதவீத தொகையான, 1,905 கோடி ரூபாயை, ஏற்பதாகவும் தெரிவித்துள்ளது. சபரிமலை முதல் புனலூர் மற்றும் நெடுமங்காடு வழியாக, இந்த ரயில் பாதையை நீட்டித்து, விழிஞ்ஞம் சர்வதேசத் துறைமுகத்துடன் இணைப்பதற்கான திட்டமும் உள்ளது. இது, கேரள மாநில மலைப் பகுதிகளுக்கு ஒரு உயிர் நாடியாகவும், கேரள பொருளாதாரத்துக்கு பெரிய உந்துதலாகவும் அமையும் என, கேரள அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே அதிகாரிகள் கூறுகையில், தெற்கு ரயில்வேயில், அதிக வருவாய் தரும் மாநிலங்களில் கேரளாவும் ஒன்று. 2024ம் ஆண்டில் மட்டும், கேரளாவில் உள்ள ஒன்பது முக்கிய ரயில் நிலையங்களில், டிக்கெட் விற்பனை வாயிலாக, 1,471 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. சபரிமலை புதிய ரயில் பாதை திட்டம், அந்த மாநில பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். கேரள அரசின் ஒப்புதல் தற்போது கிடைத்துள்ளதால், சபரிமலை திட்டப் பணிகள் வேகமெடுக்கும் என்கின்றனர்.

THE KOVAI HERALD
FEBRUARY 8, 2026 - SUNDAY

# கோவை ஜெம் மருத்துவமனை சார்பில் செயற்கை நுண்ணறிவு விழிப்புணர்வு தளம் "டாக்டர் ஜெம்" அறிமுகம்

தி கோவை ஹெரால்டு




உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு கோவை ஜெம் புற்றுநோய் மையம் சார்பில், புற்றுநோயை எதிர்த்து வெற்றி பெற்ற நோயாளிகளை கௌரவிக்கும் சிறப்பு நிகழ்ச்சியையும், "டாக்டர் ஜெம்" எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான புற்றுநோய் அறிவுத்தளம் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது.

நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு புற்றுநோய் தொடர்பான துல்லியமான, அறிவியல் ஆதாரமுள்ள மற்றும் நம்பகமான தகவல்களை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த தளம், நோயாளிகளின் சிகிச்சை புரிதலை மேம்படுத்தி, தகவல் அறிந்த சரியான முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக இஸ்ரோ விஞ்ஞானி, பிரம்மோஸ் திட்டத்தின் தந்தை டாக்டர் ஏ.சிவதாணு பிள்ளை மற்றும் மேற்கு மண்டல காவல்துறை தலைவர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் உரையாற்றிய ஜெம் புற்றுநோய் மையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் பிரவீன் ராஜ் பேசுகையில், இன்றைய காலகட்டத்தில் புற்றுநோய் குறித்த தவறான தகவல்கள் நோயாளிகளுக்கு பெரும் சவாலாக உள்ளன. இதனை எதிர்கொள்ள, சரியான அறிவியல் அடிப்படையிலான தகவல்களை தேவையான நேரத்தில் வழங்குவதற்காக "டாக்டர் ஜெம்" உருவாக்கப்பட்டுள்ளது. இது நோயாளிகளின் நம்பிக்கையையும், சிகிச்சை குறித்த புரிதலையும் அதிகரித்து, தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க அவர்களுக்கு வழிவகுக்கும், என்றார்.

மேலும், ஜெம் மருத்துவமனையின் தலைவர் பேராசிரியர் சி. பழனிவேல் கூறுகையில், "புற்றுநோய் சிகிச்சை இன்று மருத்துவமனைச் சுவர்களுக்குள் மட்டுமல்ல. தொழில்நுட்பம், மனிதநேயம் மற்றும் விழிப்புணர்வு ஒன்றிணையும் போதுதான் உண்மையான மாற்றம் நிகழ்கிறது. "டாக்டர் ஜெம்" போன்ற முயற்சிகள் எதிர்கால புற்றுநோய் பராமரிப்பின் அவசியமான பகுதியாக இருக்கும். நம்பகமான தகவல்களுடன் கூடிய மருத்துவ சிகிச்சையை நோயாளிகள் பெறுவதை உறுதி செய்வதே எங்கள் முழுமையான மற்றும் கனிவுடன் கூடிய புற்றுநோய் சேவையின் உறுதிமொழி," என்றார்.

# 16 ஜவுளித் தொழில் அமைப்பினர் முதல்வரை சந்தித்து நன்றி தெரிவித்தனர்

தி கோவை ஹெரால்டு
L.ராஜகோபால்




தனித்துவமிக்க ஜவுளி கொள்கைகளுக்காக தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களை ஜவுளி சங்கிலி தொடரில் உள்ள 16 ஜவுளி தொழில் அமைப்பு நிர்வாகிகள் சென்னையில் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

இந்திய ஜவுளி தொழில்கள் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் டி.ராஜ்குமார் தலைமையில் சென்ற இக்குழுவில் பருத்தி ஜவுளி ஏற்றுமதி கழகம், செயற்கை மற்றும் தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதி மேம்பாட்டு கழகம், விசைத்தறி மேம்பாடு மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம், தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம், தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி சங்கம், இந்திய தொழில்கள் கூட்டமைப்பு ஜவுளிப்பிரிவு, திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கம், கரூர் ஜவுளி உற்பத்தியாளர் ஏற்றுமதியாளர் சங்கம் தமிழ்நாடு நூற்பாலைகள் சங்கம், தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம், மறுசுழற்சி ஜவுளிக் கூட்டமைப்பு, இந்திய டெக்ஸ்பிர னர்ஸ் கூட்டமைப்பு, ஓபன் எண்டு நூற்பாலைகள் சங்கம், திருப்பூர் சாயக்காரர்கள் சங்கம், ராஜபாளையம் நூற்பாலைகள் சங்கம் உள்ளிட்ட ஜவுளித் தொழில் அமைப்புகள் சார்பில் ஜவுளி தொழில் வளர்ச்சிக்கு தமிழக முதல்வர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இந்திய ஜவுளி தொழில்கள் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் டி.ராஜ்குமார் கூறும் போது, தமிழக முதல்வர் ஆட்சி பொறுப்பு ஏற்ற உடன் ஜவுளி தொழிலை மேம்படுத்த இந்திய வரலாற்றில் முதல் முறையாக ஜவுளி தொழிலுக்கு தனி துறையை உருவாக்கி இந்திய ஜவுளி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு வகிக்கும் தமிழக ஜவுளி தொழிலில் உலகப் போட்டி திறனை அதிகரிக்க பல்வேறு உன்னத திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார். இதற்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக 1959 முதல் பருத்தி மீது இருந்த ஒரு சதவீத சந்தை வரி நீக்கி தமிழகத்தில் இந்திய பருத்தி கழகம் சேமிப்பு கிடங்கு அமைத்து விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய அரசு அறிவித்த ஏழு பி.எம் மித்ரா பிரம்மாண்ட ஜவுளி பூங்காக்களில் முதல் பூங்கா விருதுநகரில் அமைக்கப்பட்டது. சிறிய ஜவுளி பூங்கா திட்டத்தை எளிமையாக்கி இயந்திரங்களையும் உள்ளடக்கி மூலதனத்தை ஈர்க்கும் வகையில் திட்டத்தில் மாறுபாடுகளை செய்தது. பருத்தி விவசாயத்தை ஊக்குவிக்க நிலையான பருத்தி தொலைநோக்கு திட்டத்தை அமல்படுத்தியது. 70 சதவீத விஸ்கோஸ் பஞ்சை பயன்படுத்திவரும் தமிழக ஜவுளி தொழிலை மேம்படுத்த தூத்துக்குடி அருகே விஸ்கோஸ் பஞ்சு தயாரிக்கும் பிரம்மாண்ட தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர நூற்பாலை இயந்திரங்களை நவீனப்படுத்த ஆறு சதவீத வட்டி மானியம், ஆயிரம் புதிய நாடா இல்லா தறிகளை நிறுவ 20 சதவீத மூலதன மானியம், 3,000 விசைத்தறிகளை நவீனப்படுத்த ஐம்பது சதவீத மூலதன மானியம், விசைத்தறி பொது கட்டமைப்புகளை நிறுவு ஐந்து முதல் 25 சதவீத வரை மானியம். மின்சார சலுகைகள் உள்ளிட்ட ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை முதல்வர் மேற்கொண்டு வருகிறார்.

செயற்கை இழை பஞ்சு மற்றும் நூலின் மீது இருந்த தரக்கட்டுப்பாடு சட்டங்கள் நீக்கப்பட்டது. கொரோனா மற்றும் அமெரிக்க வரி பாதிப்பு நேரங்களில் நிதி மற்றும் இதர நிவாரணங்களை பெற்று வழங்கியது உள்ளிட்ட வரலாற்று சிறப்புமிக்க திட்டங்களுக்கு ஒட்டுமொத்த ஜவுளித்துறை சார்பாக முதல்வருக்கு இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சர்வதேச இந்திய எரிசக்தி வார மாநாட்டில் கோவையை சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் பங்கேற்பு

மத்திய பெட்ரோலிய அமைச்சகம் சார்பில் சர்வதேச இந்திய எரிசக்தி வார மாநாடு கோவாவில் உள்ள ஓஎன்ஜிசி வளாகத்தில் கடந்த ஜனவரி 27-ம் தேதி செவ்வாய்க்கிழமை முதல் ஜனவரி 30-ம் தேதி வெள்ளிக்கிழமை வரை நான்கு நாட்கள் நடந்தது.

இதில் கோவையை சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் ராஜகோபால் கலந்து கொண்டார். இவர் 19 ஆண்டு கால பத்திரிகைத் துறை அனுபவத்தை கொண்ள்ளார்.

தொழில்துறை, விமான நிலையம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறப்பு செய்திகளை எழுதி வருகிறார்.

கோவா சர்வதேச மாநாட்டில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மத்திய எரிசக்தி துறை சார்பில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து மத்திய பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியிடம் கேள்வி எழுப்பினார்.

கோவாவில் நான்கு நாட்கள் நடந்த சர்வதேச இந்திய எரிசக்தி வார மாநாடு ஜனவரி 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது.

முதல் நாள் பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்தார்.

மத்திய பெட்ரோலிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி நிறைவு விழாவில் கலந்து கொண்டு சிறப்பாக செயல்பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கினார். சர்வதேச மாநாட்டில் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 700 நிறுவனங்கள் கண்காட்சி அரங்குகளில் இடம் பெற்று தங்களின் அதிநவீன படைப்புகளை காட்சிப்படுத்தினர்.

மாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப கருத்தரங்குகளில் பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் கலந்து கொண்டு பேசினர்.

பல்வேறு முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

எதிர்வரும் நாட்களில் எரிசக்தி துறையில் இந்தியா மிகச்சிறப்பான வளர்ச்சி அடைய உதவும் வகையில் பல்வேறு சர்வதேச மாநாடு அமைந்ததாக நிறைவு விழாவில் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி நம்பிக்கை தெரிவித்தார்.

# குமரகுரு கல்வி நிறுவனங்களுடன் இங்கிலாந்து ரீடிங் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



▸ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இங்கிலாந்து ரீடிங் பல்கலைக்கழகத்தின் சர்வதேச துணைவேந்தர் முனைவர் கரோலின் பெய்லன், குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர். உடன் குமரகுரு குளோபல் என்கேஜ்மென்ட் அலுவலக இயக்குநர் முனைவர் விஜிலா கென்னடி, இங்கிலாந்தின் ஹென்லி வணிகப் பள்ளி முதல்வர் பேராசிரியர் எலேனா ஸ்பசோவா, குமரகுரு கல்வி நிறுவனங்களின் உதவி துணைத் தலைவர் சரவணன் சந்திரசேகரன்.

கோவை குமரகுரு கல்வி நிறுவனங்களும், இங்கிலாந்தின் புகழ்பெற்ற ரீடிங் பல்கலைக்கழகமும் கல்வி, ஆராய்ச்சி மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளில் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இதனை முன்னிட்டு, காலநிலை மாற்றம் மற்றும் எதிர்காலத் தலைவர்களுக்கான சர்வதேச உச்சி மாநாடு புதன்கிழமை கோவையில் நடைபெற்றது. இந்த மாநாட்டை குமரகுரு கல்வி நிறுவனங்களும், ரீடிங் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்தின. மாநாட்டின் ஒரு பகுதியாக, இரு நிறுவனங்களுக்கும் இடையே கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது.

இந்த ஒப்பந்தத்தில், குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர் மற்றும் ரீடிங் பல்கலைக்கழகத்தின் சர்வதேச துணைவேந்தர் கரோலின் பெய்லன் ஆகியோர் கையெழுத்திட்டனர். முன்னதாக, குமரகுரு கல்வி நிறுவனங்களின் தலைவர் சங்கர் வானவராயர், 'யங் இந்தியா கிளைமேட் ஆக்ஷன் நெட்வொர்க்' என்ற புதிய அமைப்பை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், இங்கிலாந்தின் ஹென்லி வணிகப் பள்ளி முதல்வரும் பேராசிரியருமான எலினாஸ் பசோவா, குமரகுரு குளோபல் என்கேஜ்மென்ட் அலுவலகத்தின் இயக்குநர் விஜிலா எட்வின் கென்னடி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மிட்டாய் என நினைத்து வெடிபொருளை கடித்த சிறுமி

ஆல்வார் மாவட்டம் சௌகிபாஸ் கிராமத்தில் வசிக்கும் 3 வயது சிறுமி அக்ஷு, தனது அக்காவுடன் அருகிலுள்ள மளிகைக் கடைக்கு சென்றுள்ளார். அப்போது கடைக்காரர் கொடுத்த பொருளை மிட்டாய் என நினைத்து வாயில் போட்டு கடித்தபோது, அது திடீரென வெடித்து சத்தத்துடன் பயங்கரமாக விபரீதத்தை ஏற்படுத்தியது. இதில், சிறுமியின் தாடை மற்றும் கன்னத்தில் காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டியது. அந்த இடத்திலேயே மயங்கி விழுந்த சிறுமியை உடனடியாக மக்கள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த சிறுமி ஆல்வாரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் அவசர அறுவை சிகிச்சை மேற்கொண்டு தற்போது ஐ.சி.யு பிரிவில் தீவிர கண்காணிப்பில் வைத்துள்ளனர். தாடைப் பகுதி கடுமையாக பாதிக்கப்பட்டதால் சிறப்பு நிபுணர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது

இந்த சம்பவம் குறித்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து சம்பந்தப்பட்ட கடைக்காரரை கைது செய்துள்ளனர். அவர் விபத்து கண்ணாடித் துண்டால் ஏற்பட்டதாக மறுப்பு தெரிவித்தாலும், முதற்கட்ட விசாரணையில் வெடிபொருள் காரணம் என்பதே உறுதி செய்யப்பட்டுள்ளது. தடயவியல் நிபுணர்கள் பொருளின் தன்மை குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.




இந்தியகோயில்கள்வசம்தங்கமும் வெள்ளியும் நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இது தவிர பக்தர்கள் வழங்கக்கூடிய காணிக்கை, நன்கொடை உள்ளிட்டவையும் நாள்தோறும் இந்தியகோயில்களின் கணக்குகளில் சேர்க்கப்பட்டுவருகின்றன.பக்தர்கள் வேண்டிக் கொண்டு வேண்டுதல் நிறைவேறும் போது அதற்கு தங்களால் ஆன பொருட்களை கோயில்களுக்குநன்கொடையாகவும் காணிக்கையாகவும் செலுத்துகிறார்கள்.

சிலர் தங்கத்தை காணிக்கையாக செலுத்துவது உண்டு. அந்த வகையில் இந்தியாவில் அதிக சொத்துமதிப்பு கொண்டிருக்க கூடிய பணக்கார கோயில்கள் என்னென்ன என்பதை நாம் இந்த பட்டியலில் பார்க்கலாம்.

**திருப்பதி**: இந்தியாவிலேயே பணக்கார கடவுள் என்றால் அது திருப்பதி ஏழுமலையான் தான். ஆந்திர மாநிலம் திருப்பதி ஏழுமலையான் கோயில் அதிக செல்வம் கொண்ட கோயிலாக முதலிடத்தை பிடித்து இருக்கிறது. திருப்பதி ஏழுமலையான் கோயிலை திருமலா திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் தான் மேலாண்மை செய்து வருகிறது.நாட்டிலேயே தங்களுடைய நிதி குறித்து மிகவும் வெளிப்படை தன்மையோடு செயல்படக்கூடிய ஒரு கோயில்.இந்தக் கோயிலின் மொத்த சொத்து மதிப்பு 2.5 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறதாம். திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு சொந்தமான நிலங்கள், அதன் வசம் இருக்கக்கூடிய ரொக்க பணம் மற்றும் தங்கம், இவை தவிர உண்டியலில் கிடைக்கக்கூடிய காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள், லட்டு உள்ளிட்ட பிரசாதங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஆகியவற்றால் இந்தியாவிலேயே அதிக வருமானம் ஈட்டும் கோயிலாக உள்ளது.

**ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில்:** கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில் சுமார் 1.2 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள செல்வத்தை கொண்டிருக்கிறது. இந்த கோயிலின் கோயிலில் மிகப்பெரிய தங்கப் புதையல் இருப்பதாக சொல்லப்படுகிறது. தங்க சிலைகள், வைரம் பதிக்கப்பட்ட ஆபரணங்கள், அரிய வகை நாணயங்கள், விலைமதிக்க முடியாத பல்வேறு பொருட்களும் இந்த கோயிலில் இருக்கின்றன. இவை அனைத்துமே பழமை வாய்ந்தவை என்பதால் இவற்றின் மதிப்பு நாம் நினைப்பதை விட பல மடங்கு அதிகமாக இருக்கும் என சொல்லப்படுகிறது.

**ஷீரடி சாய்பாபா கோயில் :** மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்திருக்க கூடிய ஷீரடி சாய்பாபா கோயில் அறக்கட்டளை இந்தியாவின் பணக்கார மத அறக்கட்டளைகளில் ஒன்றாக இருக்கிறது. ஓராண்டுக்கு இங்கே 400 கோடி ரூபாயிலிருந்து 480 கோடி வரை வருமானம் கிடைக்கிறதாம். இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்களும் இந்த அறக்கட்டளைக்கு நன்கொடைகளை வழங்குகிறார்கள். ஷீரடி சாய்பாபா அறக்கட்டளைக்கு வரக்கூடிய பணம் பெரும்பாலும் சமூக நல பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இந்த அறக்கட்டளை சார்பாக மருத்துவமனைகள் நிறுவப்பட்டுள்ளன.

**ஜம்முகாஷ்மீர் வைஷ்ணவிதேவி கோயில்:** நாட்டின் பாரம்பரியமான கோயில்களில் ஒன்றாக இருக்கிறது. ஆண்டுதோறும் இங்கே ஒரு கோடிக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தந்து வைஷ்ணவி தேவியை வழிபட்டு செல்கிறார்கள். இந்த கோயிலுக்கு ஒவ்வொரு ஆண்டும் 500 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. பக்தர்கள் வழங்க கூடிய காணிக்கை மட்டும் இல்லாமல் பிரசாதம் விற்பனை மற்றும் நன்கொடைகள் மூலம் இந்த கோயிலுக்கு நல்ல வருமானம் வருகிறது.

**பஞ்சாப் தங்க கோயில் :** அமிர்தசரஸில் உள்ள இந்த கோயில் சீக்கிய மதத்தவர்களின் மிக முக்கியமான ஒரு புனித தலம். புகழ்பெற்ற சுற்றுலா தளமாகவும் உள்ளது. இந்த கோயிலின் புகழ்பெற்ற மேற்கூரை மற்றும் வளாகமே 750 இல் இருந்து 1500 கிலோ கிராம் வரையிலான சுத்த தங்கத்தால் வடிவமைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆண்டுதோறும் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இந்த கோயிலுக்கு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இந்த கோயில் நிர்வாகம் ஒவ்வொரு நாளும் ஒரு லட்சம் பேருக்கு இலவசமாக உணவு வழங்குகிறது. இது மட்டும் அல்லாமல் பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு புகழ்பெற்றிருக்கிறது.

**மும்பை சித்தி விநாயகர் கோயில்:** மகாராஷ்டிரா மாநிலத்திலேயே அதிக வருமானம் ஈட்டக்கூடிய விநாயகர் கோயில் என்றால் மும்பை சித்தி விநாயகர் கோயில் தான். பெரிய அளவிலான தொழிலதிபர்கள், பிரபலங்கள், திரைத்துறை சார்ந்தவர்கள், அரசியல்வாதிகள் இந்த கோயிலுக்கு நன்கொடைகளை கொட்டுவார்கள். இந்த கோயில் பெரும்பாலான தன்னுடைய பணத்தை வங்கிகளில் பிக்சட் டெபாசிட் முறையில் டெபாசிட் செய்து வருமானம் ஈட்டுகிறது.

பூரி ஜெகநாதர் கோயில்: ஒடிசா மாநிலம் பூரி ஜெகநாதர் கோயில் இந்தியாவிலேயே புகழ்பெற்ற ஒரு ஆன்மீக தலம். இந்த கோயிலுக்கு சொந்தமாக ஒடிசா மற்றும் பிற பிராந்தியங்களில் மட்டும் சுமார் 60 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறதாம். இங்கே பல நூறு ஆண்டுகால பாரம்பரிய தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**மதுரை மீனாட்சி அம்மன் கோயில்:** தமிழ்நாட்டில் இருந்து அதிக சொத்து மதிப்பு கொண்ட கோயில்களின் பட்டியலில் இடம் பிடித்திருக்கும் ஒரே கோயில் மதுரை மீனாட்சி அம்மன் கோயில்.மதுரையின் அடையாளமாக அமைந்திருக்கும் மீனாட்சி அம்மன் கோயில் தன்னுடைய பாரம்பரியத்திற்கும் ஆன்மீக சேவைக்கும் பெயர் பெற்றது. பாரம்பரியமான தங்கம் மற்றும் தங்க நகைகளும், வைரம் பதிக்கப்பட்ட கிரீடங்களும் இந்த கோயிலில் இருக்கிறது. தென்னிந்தியாவின் முக்கியமான ஒரு சுற்றுலாத்தலமாகவும் மதுரை மீனாட்சி அம்மன் கோயில் திகழ்கிறது. மீனாட்சி அம்மன் கோயிலில் நடைபெறக்கூடிய பல்வேறு திருவிழாக்களும் புகழ்பெற்றவையாக இருக்கின்றன. இந்த சமயங்களில் இங்கே அதிகமான பக்தர்கள் வருகை தருகிறார்கள். பக்தர்கள் காணிக்கை மூலம் இந்த கோயிலுக்கான வருமானம் கிடைக்கிறது.

**சபரிமலை ஐயப்பன் கோயில்:** உலகப் புகழ்பெற்ற கோயில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் மாலை போட்டுக்கொண்டு சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு சென்று வருகிறார்கள். மகர விளக்கு மற்றும் மண்டல பூஜை காலங்களில் இந்த கோயிலுக்கு சுமார் 300 கோடி ரூபாய் வருமானம் கிடைப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கோயிலுக்கான பெரும்பான்மையான வருமானம் அவர்கள் விற்பனை செய்யும் அரவணை பாயாசம் மூலம் தான் கிடைப்பதாக சொல்லப்படுகிறது.

**சோம்நாத் கோயில்:** குஜராத் மாநிலத்தில் உள்ள இந்த கோயில் புகழ்பெற்றது. இந்த கோயிலின் கருவறையில் சுமார் 130 கிலோ கிராம் தங்கமும் அதன் கோபுரத்தில் 100 கிலோவுக்கு அதிகமான தங்கமும் கொண்டு வடிவமைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இந்த கோயில் அறக்கட்டளை மூலம் நிர்வாகம் செய்யப்படுகிறது. அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்லக்கூடிய ஒரு கோயிலாகவும் இருக்கிறது.

## மோமோஸ் வாங்க ரூ.85 லட்ச தங்க நகைகளை கொடுத்த சிறுவன்



இலவசமாக மோமோஸ் தருவதாக ஆசை காட்டி, 7ஆம் வகுப்பு படிக்கும் சிறுவனிடம் ரூ.85 லட்சம் மதிப்பிலான தங்க நகைகளை மோசடியாகப் பெற்றுக் கொண்ட சம்பவம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தியோரியா நகரத்தைச் சேர்ந்த விம்லேஷ் மிஸ்ரா (வயது 40) வாரணாசியில் உள்ள கோயிலில் பூசாரியாக பணியாற்றிவருகிறார். இவருடைய மகன் 7ஆம் வகுப்பு படித்து வருகிறார். அந்தச் சிறுவனுக்கு மோமோஸ் என்ற உணவு மீது அதிக ஈர்ப்பு இருந்ததால், கிடைக்கும் பணத்தை வைத்து அருகிலுள்ள கடையில் அடிக்கடி மோமோஸ் வாங்கிசாப்பிட்டுவந்ததாக கூறப்படுகிறது.

இதை கவனித்த அந்த மோமோஸ் கடையின் உரிமையாளர்கள், சிறுவனிடம் “இலவசமாக மோமோஸ் வேண்டுமென்றால், வீட்டில் உள்ள சில பொருட்களை எடுத்துவரவேண்டும்” என்று கூறிஆசைகாட்டியுள்ளனர். தொடர்ந்து, வீட்டிலுள்ள தங்கநகைகளை கொண்டு வந்தால் வாழ்நாள் முழுவதும் இலவசமாக மோமோஸ் தருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் மகிழ்ச்சியடைந்த சிறுவன், வீட்டில் இருந்த தங்க நகைகளை எடுத்து வந்து கடை உரிமையாளர்களிடம் வழங்கி,மோமோஸ்பெற்றுக் கொண்டுள்ளான். இவ்வாறு ரூ.85 லட்சம் மதிப்பிலான தங்க நகைகள் கடைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கிடையில், விம்லேஷ் மிஸ்ராவின் சகோதரி தனது நகைகளை பெறுவதற்காக வீட்டிற்கு வந்தபோது, அலமாரியைத் திறந்து பார்த்ததில் தங்க நகைகள் அனைத்தும் காணாமல் போனது தெரிய வந்தது. இதனால் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக விம்லேஷ் மிஸ்ரா ராம்பூர் கர்கானா காவல்நிலையத்தில் புகார் அளித்தார். காவல்துறையினர் விசாரணை மேற்கொண்ட போது, மோமோஸ் வாங்குவதற்காக நகைகளை கடைக்கு கொடுத்ததாக சிறுவன் தெரிவித்துள்ளான்.

பின்னர் காவல்துறையினர் அந்த மோமோஸ் கடைக்கு சென்றபோது, கடை மூடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர், சம்பந்தப்பட்ட மோமோஸ் கடை உரிமையாளர்கள் மூவரை தீவிரமாக தேடி வருகின்றனர்.

## நாணயம் விகடன் ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ டாக்டர் நல்லா ஜி.பழனிசாமிக்கு வழங்கி கௌரவம்



தி கோவை ஹெரால்டு

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமிக்கு, விகடன் குழுமத்தின் முன்னணி நிதி மற்றும் வணிக இதழான ‘நாணயம் விகடன்’, ‘வாழ்நாள் சாதனையாளர் விருது ‘வழங்கி சிறப்பித்துள்ளது. சென்னையில் நடைபெற்ற கோலாகலமான விழாவில் இந்தவிருதுவழங்கப்பட்டது.

இந்தியாவின் மருத்துவம், கல்வி, சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் டாக்டர்நல்லாஜி.பழனிசாமி அவர்களின் பங்களிப்பைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பின்வரும் துறைகளில் அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை.

உலகத்தரம் வாய்ந்த மருத்துவம்:அமெரிக்காவில் தனது மருத்துவப் பணியை முடித்துவிட்டு இந்தியா திரும்பிய அவர், நவீன மருத்துவத் தொழில்நுட்பங்கள் சாமானிய மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற கனவோடு கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையைத் தொடங்கினார்.

இவரது முயற்சியால் கோயம்புத்தூர் ஒரு மிகச்சிறந்த மருத்துவ மையமாக உருவெடுத்தது. பல உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் ரோபோட்டிக் அறுவை சிகிச்சைகளை இப்பகுதிக்குமுதன்முதலில் அறிமுகப்படுத்தினார். 6ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்துள்ளது.

மருத்துவம்மட்டுமின்றி, ‘டாக்டர் என்.ஜி.பி.’ கல்வி நிறுவனங்கள்மூலம்கலை, அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவம் சார்ந்த படிப்புகளை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கி வருகிறார். ‘என்.ஜி.பி. ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளை’ மூலமாக ஏழை மாணவர்களின் கல்விக்கும், எளிய மக்களின் மருத்துவச் செலவுகளுக்கும் தொடர்ந்து உதவி செய்து வருகிறார்.

இந்த விருதைப் பெற்றுக்கொண்ட டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி, விகடன் குழுமத்திற்குத் தனது நன்றியைத் தெரிவித்தார். அப்போது அவர் பேசுகையில்: “இந்த விருது எனக்குக் கிடைத்த அங்கீகாரம் மட்டுமல்ல; என்னுடன் இணைந்து பணியாற்றிய ஆயிரக்கணக்கான மருத்துவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்குக் கிடைத்த பெருமை. தரமான மருத்துவமும் கல்வியும் சிலருக்கு மட்டுமேயான சலுகையாக இருக்கக் கூடாது; அது அனைவருக்கும் கிடைக்க வேண்டிய உரிமை என்பதே எனது லட்சியம்,” என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

## இந்தியாவில் வறுமையில் இருந்த 25 கோடி மக்களை நடுத்தர வர்க்கமாக உயர்த்தி மத்திய அரசு சாதனை

கடந்த 2014ம் ஆண்டு மத்தியில் ஆட்சிக்கு வந்த பாஜக தலைமையிலான தேசியஜனநாயகக்கூட்டணி அரசு, பொருளாதாரத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்து வந்துள்ளது.

குறிப்பாக இதுவரை இருந்த அரசுகள் போல கவர்ச்சிகரமான மானியங்களில் கவனம் செலுத்தாமல், மக்கள் பயன் பெறும் வகையிலான அடிப்படைச் சீர்திருத்தங்களில் தான் அதிகமான கவனம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதிலும் கடந்த ஆண்டு செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் உச்சமானவை. வருமான வரி விலக்கிற்கான உச்ச வரம்பை உயர்த்தியதன் மூலமாக, வரிவிதிப்பு வலைக்குள் இருந்த பலகோடி நடுத்தர மக்கள் வெளிவந்தார்கள். அதன்மூலமாக, அவர்களின் சுகாதார, வீட்டுவசதி உள்ளிட்ட இதரச் செலவினங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த 11 ஆண்டுகால தேசியஜனநாயகக்கூட்டணி ஆட்சியில் நடைமுறைப் படுத்தப்பட்ட மக்கள்நலத் திட்டங்கள் வாயிலாக, வறுமைக்கோட்டிற்குக் கீழிருந்த சுமார் 25 கோடி பேர் அதிலிருந்துவிடுபட்டு, புதிய நடுத்தரவர்க்கமாக உருவெடுத்திருக்கிறார்கள். அவர்களின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்து வருகிறது.

நாட்டின் உள் கட்டமைப்பிலும் டிஜிட்டல் கட்டமைப்பிலும் மத்திய அரசு செய்த மாபெரும் முதலீடுகள் பொருளாதாரச் சீர்த்திருத்தத்தில் முக்கியமானவை. 2014ம் ஆண்டு 5 பெரு நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில் சேவை இருந்தது. அது தற்போது 23 பெருநகரங்களுக்கு விரிவடைந்திருக்கிறது. இதனால் நகர்ப்புற போக்குவரத்தின் முகம் அடியோடுமாறிஇருக்கிறது. தற்போது உலகிலுள்ள மெட்ரோரயில்சேவைகளில் மூன்றாவதுபெரியமெட்ரோ ரயில் சேவையைக் கொண்டதாக இந்தியா உருவெடுத்துள்ளது.

வரிவிதிப்பில் நடுத்தர வர்க்கம் மகிழும் வகையில் பல சலுகைகள் கடந்த பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்தாலும், சென்ற நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட வருமான வரிச் சலுகையே உச்சம் தொட்டது. வருமான வரி விதிப்புக்கான உச்சபட்ச ஆண்டு வருமான வரம்பை ரூ. 7 லட்சத்தில் இருந்து ரூ. 12 லட்சமாக சென்ற ஆண்டு உயர்த்தியது மத்திய அரசு. இதன்மூலமாக, மாதாந்திர சம்பளம் பெற்றுவந்த கோடிக் கணக்கான நடுத்தர வர்க்க மக்கள் வரிச்சுமை குறைந்து, கூடுதலான சேமிப்பைச் செய்ய முடிந்தது. ஆண்டு வருமானம் ரூ. 10 லட்சம் முதல் ரூ. 20 லட்சம் வரை ஈட்டி வந்த அதிக சம்பளக்காரர்களும் பணவீக்கத்தால் பாதிக்கப்படாமல் இருக்க, அதன் மீதான வரிவிதிப்பு விகிதங்கள் 5% முதல் 10% வரை மாற்றப்பட்டுள்ளன.

சென்ற ஆண்டு இறுதியில் அமலாக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு மாற்றங்கள் (ஜி.எஸ்.டி. 2.0) உடனடிப்பலன் தரத் தொடங்கிவிட்டன.

இதற்கு முன் 12% முதல் 25% வரை இருந்த ஜி.எஸ்.டி. வரிவிகிதங்கள் 5% முதல் 18% வரையிலானதாக எளிமைப்படுத்தப்பட்டுள்ளதால், அன்றாடப் பயன்பாட்டுப்பொருட்களின் விலை குறைந்து, மக்களின் செலவினம் குறைந்திருக்கிறது.

நடுத்தரவர்க்கமக்களின் சேமிப்பு இதனாலும் அதிகரிக்கிறது. ஆயுள் காப்பீடு, சுகாதாரக்காப்பீடு ஆகிய சேவைகளுக்கு விதிக்கப்பட்டு வந்த ஜி.எஸ்.டி. வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மருந்துகள், பேக்கிங் செய்யப்பட்ட உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி. குறைக்கப்பட்டதால் விலை குறைந்துள்ளது. டி.வி., ஃபிரிட்ஜ், சிறு கார்கள் மீதான ஜி.எஸ்.டி. வரிவிதிப்பிலும் பெரும் சலுகைகள் கிடைத்து வருவதால், நடுத்தர மக்களின் கைகளில் கூடுதலாக பணம் புழங்கத் தொடங்கியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி உயர்வதைத் தடுக்கவும், விலை நிலவரங்களில் நிச்சயமற்ற நிலை ஏற்படுவதைத் தவிர்க்கவும், மத்திய அரசு விலைவாசியை நிலைநிறுத்தும் நிதியை பயன்படுத்தி வருகிறது. இதன்மூலமாக, வெங்காயம், தானியங்கள், பருப்பு வகைகள், ஆகியவற்றை விவசாயிகளிட மிருந்து அரசே நேரடியாகக் கொள்முதல் செய்து, நியாயமான விலையில் வெளிச்சந்தையில் விற்பனை செய்ய வழிவகை செய்கிறது. இதனால், அத்தியாவசியப் பொருட்கள் செயற்கையான முறையில் விலை ஏறுவதும், பற்றாக்குறையும் தடுக்கப்பட்டுள்ளது.

## வேலையை இழந்த சசி தரூர் மகன் வாஷிங்டன் போஸ்டில் நடப்பது என்ன?



அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் இருந்து இந்த பத்திரிகை வெளியாகிறது. 1877ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த பத்திரிகை அமெரிக்காவின் முகமாக பார்க்கப்பட்டது. புகழ்பெற்ற இந்த பத்திரிகைதான் வரலாற்றில் முதன்முறையாக கடந்த பிப்ரவரி 4ம் தேதி 300 பேரை பணியில் இருந்து நீக்கியுள்ளது. இந்த பத்திரிகையில்தான் திருவனந்தபுரம் காங்கிரஸ் எம்.பி சசி தரூரின் மகன் இஷான் தரூர் சர்வதேச நிகழ்வுகள் குறித்து கட்டுரைகள் எழுதி வந்தார். தற்போது, இவரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த தகவலை தனது எக்ஸ் பக்கத்தில் உறுதி செய்துள்ள இஷான் தரூர், இன்று வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் இருந்து நான் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளேன். பெரும்பாலான சர்வதேச பத்திரிகையாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக என் நண்பர்களாகவும் ஒத்துழைப்பாளர்களாகவும் இருந்த ஆசிரியர்கள் மற்றும் நிருபர்களுக்காகவும் எனது மனம் உடைந்து போனது. அவர்களுடன் பணியாற்றுவது மரியாதையான விஷயமாகும்.

உலகத்தையும் அதில் அமெரிக்காவின் இடத்தையும் வாசகர்கள் நன்கு புரிந்துகொள்ள உதவும் வகையில், 2017ம் ஆண்டு நான் ‘உலகப்பார்வை’ என்ற தலைப்பில் கட்டுரைகள் எழுத தொடங்கினேன். இந்த கட்டுரைகளை படித்த சந்தாதாரர்கள், மற்றும் வாசகர்களுக்கு நான் நன்றியுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

மற்றோரு பதிவில் வாஷிங்டன் போஸ்டின் காலியான அலுவலக அறையின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள இஷா, இது ஒரு மோசமான நாள் என்று கூறியுள்ளார்.

## போதை பொருள் மலையாள நடிகை கைது



சென்னை வளசரவாக்கத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் திரைப்பட நடிகை அஞ்சு கிருஷ்ணா உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் பயன்படுத்தியதாக கடந்தாண்டு நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். இது, தமிழ் திரை உலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், தற்போது போதைப் பொருள் பயன்படுத்திய குற்றச்சாட்டில் நடிகை அஞ்சு கிருஷ்ணனும் சிக்கியுள்ளார்.

சென்னை வளசரவாக்கத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியதாக விக்னேஸ்வரன் என்ற இளைஞரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தினர். அவருக்கு போதைப் பொருள் விநியோகம் செய்ததாக வெங்கடேஷ் குமார் என்பவரும் பிடிபட்டார்.

இருவரிடமும் நடத்திய விசாரணையில், திரைப்பட நடிகை அஞ்சு கிருஷ்ணா, துணை நடிகை நிவேதா உள்ளிட்ட 9 பேரும் சிக்கியுள்ளனர்.

மலையாள திரையுலகில் ஆகாசம் கடன் என்ற படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமான அஞ்சு கிருஷ்ணா, வெள்ளிமலை என்ற திரைப்படம் வாயிலாக தமிழில் ரசிகர்கள் மத்தியில் அறிமுகமானார்.

## அரசியல்வாதிகளால் கிரிக்கெட் தனது பாதையில் இருந்து விலகி விட்டது

### நாசர் ஹுசைன் ஆதங்கம்




ஐசிசி நடத்தும் 10வது ஆடவர் டி.20 உலக கோப்பை தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் பிப்ரவரி 8ம் தேதி முதல் மார்ச் 8ம்தேதி வரை நடக்கிறது. 20 அணிகள்பங்கேற்கும் இந்த தொடரில் ஏ பிரிவில் இடம் பெற்றுள்ள இந்தியா-பாகிஸ்தான் அணிகள் கொழும்பில் வரும் 15ம் தேதி மோத உள்ளன. ஆனால் இந்த போட்டியை புறக்கணிக்கப்போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. அவ்வாறு புறக்கணித்தால் நிதி பகிர்வு நிறுத்தப்படுவதுடன், வெளிநாட்டுவீரர்கள் பாகிஸ்தான் சூப்பர்லீக்கில் பங்கேற்க தடை விதிக்கப்படும் என ஐசிசி எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப், “டி20 உலகக் கோப்பை தொடர்பாக நாங்கள் ஒரு மிகத் தெளிவான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். இந்தியாவுக்கு எதிராக நாங்கள் விளையாடமாட்டோம். ஏனெனில் விளையாட்டுத் துறையில் எந்த அரசியலும் இருக்கக்கூடாது. நாங்கள் மிகவும் கவனமாக நிலைப்பாட்டை எடுத்துள்ளோம். வங்கதேசத்துடன் முழுமையாக இணைந்து நிற்க வேண்டும் என கவனமாக முடிவு செய்துள்ளோம், இது மிக பொருத்தமான முடிவுதான்” என்று தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் நாசர் ஹுசைன் ஐ.சி.சி ஒரு தலைபட்சமாக இந்தியாவுக்கு ஆதரவாக செயல்படுவதாக பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து , ஸ்கை ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சியில் பேசிய நாசர் ஹுசைன், சமீப காலமாக அரசியலுக்குள் கிரிக்கெட் போட்டியை கொண்டு வருவது அதிகரித்துள்ளது. அரசியல்வாதிகளால் பாதிக்கப்படுவது கிரிக்கெட் வீரர்களே. கைகுலுக்க மறுப்பது, வெற்றிக் கோப்பையை பெற மறுப்பது என பல சம்பவங்கள் அரங்கத்தில் நடக்கின்றன. முன்பெல்லாம் கிரிக்கெட் நாடுகளை ஒருங்கிணைக்க பயன்படுத்தப்பட்டது. இப்போது , கிரிக்கெட் அதிலிருந்து விலகி செல்வதை பார்க்க முடிகிறது.

எனக்குள் ஒரு கேள்வி எழுகிறது. இந்த கேள்விக்கு ஐ.சி.சியால் பதிலளிக்க முடியுமா? ஐ.சி.சி. நடத்தும் முக்கியமான தொடரில் இருந்து இந்திய அரசு கொடுக்கும் நெருக்கடி காரணமாக இந்திய அணி பங்கேற்க முடியாமல் போகிறது என்று வைத்துக் கொள்வோம். இந்த தருணத்தில், பாகிஸ்தான் மற்றும் வங்கதேச அணியை நடத்துவதை போல, இந்திய அணியை ஐ.சி.சியால் நடத்த முடியுமா? அப்போதும், ஐ.சி.சி உறுதியாக நின்று, இந்தியாவை வெளியேற்றி விடுமா? என்கிற கேள்வி எனக்குள் இருக்கிறது. வங்க தேசத்தை, பாகிஸ்தான் அணியை நடத்துவது போன்று அனைத்துஅணிகளையும்சமமாக நடத்த வேண்டுமென்பதுதான் எனது ஆசை.

நீங்கள் இன்னும் அழ வேண்டுமென்று இந்தியரசிகர்கள் நினைக்கலாம். ஆனால், இதுவெல்லாம் பாகிஸ்தான், வங்கதேசத்தில் கிரிக்கெட்டுக்கு இருக்கும் மவுசு குறைய வைத்து விடும். 20 ஆண்டுகளுக்கு முன்பு போல சிறந்த ஆட்டங்களை காண முடியாத நிலைக்குத் தள்ளி விடும். இந்தியா பாகிஸ்தான் அல்லது வங்கதேச அணிக்கு எதிராக ஆடும் போது, ஒன்சைடு ஆட்டங்களாக மாறி விட்டால் களத்தில் சுவாரஸ்யம் இருக்குமா?. அதோடு, அரசியல் கிரிக்கெட் அணிகளை தங்களது வெறுப்பை பரப்பும் காரணியாக பயன்படுத்துகிறது. இதன் காரணமாக, இந்திய அணிகளின் உரிமையாளர்கள் பாகிஸ்தான், வங்கதேச அணி வீரர்களை வாங்க முடியாத சூழல் உள்ளது.

இவ்வாறு நாசர் ஹுசைன் பேசியுள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் கொல்கத்தா அணிக்காக வங்கதேச வீரர் முஸ்தாஃபிசூர் ரஹ்மான் ஏலம் எடுக்கப்பட்டிருந்தார். சமீப காலமாக, வங்கதேசத்தில் இந்துக்கள் மீது வன்முறை கட்ட விழ்த்துவிடப்படுவதால், இந்திய அரசு முஸ்தாஃபிசூர் ரஹ்மானை கொல்கத்தா அணியில் இருந்து நீக்க வேண்டுமென்று நெருக்கடி கொடுத்தது. இதையடுத்து, கொல்கத்தா அணி அவரை நீக்கி விட்டது. இதற்கு, எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக வங்கதேச அணி உலகக்கோப்பை தொடரை புறக்கணிக்கப் போவதாக அறிவித்தது. தொடர்ந்து, வங்கதேச அணிக்கு பதிலாக ஸ்காட்லாந்து அணி விளையாடுமென்று அறிவித்துள்ளது. ஐ.சி.சியின் செயல்பாடுகளை கண்டித்து பாகிஸ்தானும் டி20 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியை எதிர்த்து விளையாட மறுத்துள்ளது.

# இரு பக்கமும் துண்டு போடும் பிரேமலதா

## திமுக, அதிமுக முடிவு என்ன?

தி கோவை ஹெரால்டு

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், அரசியல் களம் நாளுக்கு நாள் பரபரப்பாகி வருகிறது. கூட்டணி அமைப்பதில் அதிமுக தீவிரமாக செயல்பட்டு வரும் நிலையில், தேமுதிகவை தங்களது கூட்டணிக்குள்கொண்டுவரமுக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தேமுதிகவுடன் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். வரும் தேர்தலில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க எந்த வாய்ப்பையும் இழக்கக் கூடாது என்பதில் கட்சி உறுதியாக



இருப்பதாகவும் கூறினார்.

பேச்சுவார்த்தையின் தற்போதைய நிலவரம் குறித்து விளக்கிய எடப்பாடி பழனிசாமி, தேமுதிக தரப்பில் 14 சட்டமன்றத் தொகுதிகள் கோரப்படுவதாகக் கூறினார். “14” என்ற எண்ணின் கூட்டுத்தொகை “5” ஆக வருவதால், அது ராசியான எண் எனக் கருதி பிரேமலதா விஜயகாந்த் அந்த எண்ணிக்கையில் பிடிவாதமாக இருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

ஆனால் அதிமுக தரப்பில் 8 தொகுதிகள் வரை ஒதுக்கத் தயாராக இருப்பதாகவும், அதற்கு தேமுதிக சம்மதித்தால் கூட்டணி உறுதியானதாக மாறும் என்றும் அவர் மாவட்டச் செயலாளர்களிடம் தெரிவித்தார்.

2011-ஆம் ஆண்டுக்குப் பிறகு தேமுதிகவுக்கு பெரிய வெற்றி கிடைக்கவில்லை என்றாலும், அந்த கட்சியின் வாக்கு வங்கி முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு அதிமுக இம்முறை தேமுதிகவை இணைக்க ஆர்வம் காட்டுகிறது.

இதற்கிடையில், திமுகவும் தேமுதிகவுக்கு 6 முதல் 7 தொகுதிகள் வரை ஒதுக்க முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இதனால் தேமுதிக எந்த கூட்டணியை தேர்வு செய்யும் என்பது அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புகள் விரைவில் வெளியாக உள்ள நிலையில், அதிமுக தனது தேர்தல் பணிகளை வேகப்படுத்தியுள்ளது. கூட்டணி பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிந்தால், அதிமுக தலைமையிலான கூட்டணி இன்னும் வலுவடையும் என கட்சியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# குன்னூர் கிளையின் முதல் பெண் நடத்துநர்

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகில் உள்ள ஓட்டுப்பட்டறை பகுதியைச் சேர்ந்தவர் ரவி. தமிழ்நாடு அரசின் போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி வந்த இவருக்கு கடந்த 2009 - ம் ஆண்டு ஏற்பட்ட திடீர் மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது. சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஓட்டுநர் ரவியின் இழப்பால் அவரின் மனைவி மற்றும் இரண்டு மகன்களும் கடுமையான இன்னலுக்கு உள்ளாகி வந்துள்ளனர். இதனை ஈடு செய்யும் விதமாக ரவியின் ஓட்டுநர் பணிக்கு இணையாக அவரின் மனைவி தீபாவிற்கு அரசு பேருந்து நடத்துனர் பணியை வழங்கி ஆணை பிறப்பித்திருக்கிறது தமிழ்நாடு அரசு



போக்குவரத்து கழகம்.

பணி நியமன ஆணையைப் பெற்றுக் கொண்ட தீபா, அரசு போக்குவரத்து கழகத்தின் குன்னூர் கிளையின் முதல் பெண் நடத்துனராக பயணத்தை தொடங்கியிருக்கிறார். நீலகிரி மாவட்டத்தில் இயக்கப்படும் அரசு பேருந்துகளில் அண்மை காலமாக பெண்களை நடத்துநர்களாக நியமித்து வரும் நிலையில், குன்னூர் கிளையில் முதல் பெண் நடத்துனராக தீபா பணி நியமனம் பெற்றுள்ளார்.

# சுடிதார் அணிவது தவறா?

## பள்ளி வாசலில் ஆசிரியை போராட்டம்

கேரள மாநிலத்தில் நடந்த பள்ளி சர்ச்சை ஒன்று கல்வித் துறையில் பெரும் விவாதத்தை உருவாக்கியுள்ளது. அரசு உதவி பெறும் பள்ளி ஒன்றில் சுடிதார் அணிந்து வந்த தலைமை ஆசிரியைக்கு பள்ளிக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட சம்பவம் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொல்லம் மாவட்டத்தில் உள்ள அந்த பள்ளிக்கு கடந்த புதன்கிழமை காலை 9 மணியளவில் வந்த தலைமை ஆசிரியையை, பள்ளி மேலாளரின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு ஊழியர்கள் வாயிலிலேயே தடுத்து நிறுத்தினர்.

பெண் ஆசிரியர்கள் சுடிதார் அணிந்து பள்ளிக்கு வரக்கூடாது என்ற மேலாளரின் வாய்மொழி




உத்தரவை மீறியதாகக் கூறி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பள்ளிக்குள் அனுமதி மறுக்கப்பட்டதால், மதிய உணவுக்காக மாணவர்களுக்குக் கொண்டுவரப்பட்ட முட்டை தட்டுடன் பள்ளி வாசலில் அமர்ந்து தலைமை ஆசிரியை போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்த காட்சிகள் தொலைக்காட்சி ஊடகங்களில் வெளியானதும் விவகாரம் மாநிலம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தகவலறிந்து வந்த கொட்டாரக்கரா காவல்துறையினர் பள்ளி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அதன் பின்னரே தலைமை ஆசிரியைக்கு பள்ளிக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டது.

இந்த உடை சுதந்திர விவாதம் ஆசிரியர்களின் தனிப்பட்ட உரிமைகள் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் கட்டுப்பாடுகள் குறித்து புதிய கேள்விகளை எழுப்பியுள்ளது. கல்வி நிலையங்களில் பெண்களின் மரியாதையும் சுதந்திரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வரும் நிலையில், இந்த சம்பவம் முக்கிய திருப்பமாக பார்க்கப்படுகிறது.

# வறுமையிலும் தளராத பக்தி கொண்ட புகழ்த்துணை நாயனார்

63 நாயன்மார்களின் திருவாழ்க்கைகள், மனித வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளுக்கு மத்தியில் இறைவன் மீது கொண்ட பக்தி எவ்வாறு நிலைத்திருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றன. அந்த வரிசையில், கடும் வறுமை மற்றும் பஞ்சகாலத்திலும் சிவபக்தியில் ஒரு துளியும் மாறாதவராக விளங்கியவர் புகழ்த்துணை நாயனார்.



செருவல்லிப்புத்தூரைச் சேர்ந்த புகழ்த்துணை நாயனார், எளிய வாழ்க்கை வாழ்ந்த சிவத் தொண்டராக இருந்தார். சிவாகம முறைப்படி தினந்தோறும் சிவலிங்கத்துக்கு பூஜை செய்வதே அவரது வாழ்வின் ஒரே குறிக்கோளாக இருந்தது. ஒருகாலத்தில் நாடு முழுவதும் கடும் பஞ்சம் ஏற்பட்டபோது, மக்கள் பசியால் ஊர்களை விட்டு இடம்பெயர்ந்தனர். ஆனால், புகழ்த்துணை நாயனார் மட்டும் தன் ஊரையும், தன் ஈசனையும் விட்டு பிரியாமல் இருந்தார்.

பசியால் உடல் மெலிந்து, பலவீனமடைந்த நிலையிலும், அவர் சிவபூஜையை ஒருநாளும் கைவிடவில்லை. ஒருநாள், அபிஷேகத்திற்காக நீர்குடம் எடுத்துச் செல்லும்போது, பல நாட்களாக உணவில்லாததால் உடல் தாங்காமல், சிவலிங்கத்தின் அருகே மயங்கி விழுந்தார். குடம் உடைந்து நீர் சிதறிய நிலையில், அவர் மயக்கமடைந்தார். தன் பக்தனின் தியாகத்தை கண்ட சிவபெருமான், அன்று இரவு கனவில் தோன்றி, “இந்த பஞ்ச காலம் முடியும் வரை, உன் அன்றாட தேவைகளுக்கும் பூஜை தடையின்றி நடைபெறவும் தினமும் ஒரு ‘படிக்காசு’ பீடத்தில் வைக்கப்படும்” என்று அருளினார்.

மறுநாள் விழித்த நாயனார், பீடத்தில் ஜொலிக்கும் பொற்காசைக் கண்டு மனம் நெகிழ்ந்தார். அந்தப் படிக்காசின் மூலம் தன் பசியை மட்டுமல்லாமல், பிற சிவ அடியார்களின் பசியையும் போக்கினார். இதனால், இறைத் தொண்டு எவ்வித தடையுமின்றி தொடர்ந்தது.

வாழ்க்கையில் துன்பங்கள் நேரும்போது பலர் நம்பிக்கையை இழக்கும் நிலையில், “எது வந்தாலும் என் ஈசன் என்னைக் கைவிடமாட்டான்” என்ற உறுதியான நம்பிக்கையுடன் வாழ்ந்த புகழ்த்துணை நாயனாரின் திருவாழ்க்கை, இன்றைய தலைமுறைக்கும் பக்தி, தியாகம் மற்றும் நம்பிக்கையின் பேர்பாடமாக விளங்குகிறது.

# கோவை லேடீஸ் சர்க்கிள் 85 சார்பில் காளப்பட்டி அரசு பள்ளியில் ஸ்மார்ட் வகுப்பறை



காளப்பட்டி அரசு பள்ளியில் LC 85 சார்பில் ஸ்மார்ட் வகுப்பறை தொடங்கப்பட்டது. இதன் மூலம் 400-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்து, பாடங்களை எளிதாகவும் முழுமையாகவும் புரிந்து கொள்ள முடிகிறது. இணையவழி காட்சிப் பொருட்கள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வியை நவீனப்படுத்துவதில் ஸ்மார்ட் வகுப்பறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை மாணவர்களின் ஆர்வத்தை அதிகரித்து, எதிர்காலத்திற்கு தயாராக உதவுகின்றன. இந்த முயற்சி தலைவர் கீர்த்தனா, திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆதரவுடன் செயல்படுத்தப்பட்டு, மாணவர்களுக்கு சிறந்த கற்றல் அனுபவத்தை வழங்குகிறது.

# கோவை கிக்கானி குளோபல் அகாடமியில் பள்ளி மையக் கற்றல் மேலாண்மை தளம் அறிமுகம்

பள்ளி மாணவர்களின் எதிர்காலத் திறன்களை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ‘மேட்டா இன்னோவா’ என்ற கற்றல் மேலாண்மைத் தளம், கோவை பச்சாபாளையத்தில் உள்ள கிக்கானி உலகப் பள்ளி வளாகத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட இந்த தளம், கற்றல் கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் திறன் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த கல்வித் தீர்வாக செயல்படுகிறது.

இதனுடன் இணைந்து மூன்று நாட்கள்




நடைபெற்ற தொழில்நுட்ப விழாவில் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். பள்ளிக் கல்வித் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் தளமாக இது விளங்கும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இது கல்வி நிறுவனங்களுக்கு, குறிப்பாக பள்ளிகளுக்கு தேவையான கற்றல், கற்றலை கண்காணித்தல், மாணவர்களின் செயல்திறனை அளவிடல் மற்றும் எதிர்காலத்திற்கு தேவையான திறன்களை வளர்த்தல் ஆகிய அனைத்திற்குமான ஒருங்கிணைந்த கல்வி மற்றும் தொழில்நுட்ப தீர்வாக செயல்படுகிறது.

# சத்துள்ள முருங்கை கீரை பொடி செய்வது எப்படி?



இயற்கையின் கொடையான முருங்கைக் கீரை சூப்பர் ஃபுட் என்று அழைக்கப்படுகிறது.

இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் வைட்டமின்கள் நிறைந்த இந்த கீரையை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி உண்பது கடினம். ஆனால், முருங்கை இலையை வைத்து சுவையான ஒரு பொடியாக தயாரித்து வைத்தால், சாதம், இட்லி, தோசை என எதனுடன் வேண்டுமானாலும் சேர்த்து உண்ணலாம். இது ஆரோக்கியத்தையும் சுவையையும் ஒருசேர வழங்கும் ஒரு அற்புதமான வீட்டு முறை தயாரிப்பாகும். இதனை எப்படி செய்வது என்று பார்ப்போம்.

முதலில் முருங்கைக் கீரையை நன்றாகச் சுத்தம் செய்து, வெயிலில் அல்லது நிழலில் உலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும். உலர்த்திய கீரையை ஒரு வாணலியில் போட்டு மிதமான சூட்டில் வறுத்தால் அது நன்றாக மொறுமொறுப்பாக மாறும். ஒரு வாணலியில் சிறிதளவு நல்லெண்ணெய் சேர்த்து உளுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு மற்றும் துவரம் பருப்பு ஆகியவற்றை பொன்னிறமாக வறுத்து தனியாக எடுத்துக்கொள்ளவும்.

அதே வாணலியில் காய்ந்த மிளகாய், மிளகு, பூண்டு, சீரகம், வெள்ளை எள்ளு மற்றும் தனியா சேர்த்து நன்றாக வாசனை வரும் வரை வதக்கவும். இத்துடன் கருவேப்பிலை மற்றும் சிறிய உருண்டை புளியையும் சேர்த்து பொரியும் வரை வதக்க வேண்டும். வறுத்த பொருட்கள் அனைத்தும் ஆறிய பிறகு, அவற்றை ஒரு மிக்ஸி ஜாரில் மாற்றி, அதனுடன் தேவையான அளவு உப்பு மற்றும் பெருங்காயத்தூள் சேர்க்கவும்.

இவற்றுடன் வறுத்து வைத்துள்ள முருங்கைக்கீரையையும் சேர்த்து பொடியாக அரைத்து எடுத்தால் மணமிக்க முருங்கைக்கீரை பொடி தயார். இந்த பொடியை ஒரு காற்றுப்புகாத டப்பாவில் அடைத்து வைத்தால் ஒரு மாதம் வரை கெடாமல் இருக்கும்.

இதனைச் சூடான சாதத்தில் நெய் அல்லது நல்லெண்ணெய் சேர்த்துப் பிசைந்து சாப்பிடலாம். உடலுக்கு அவ்வளவு சத்து கிடைக்கும்.

# நிலாவிலிருந்து ரீல்ஸ்: விண்வெளி வீரர்களுக்கு நாசா புதிய அனுமதி

விண்வெளி ஆய்வில் ஈடுபடும் நாசா வீரர்களுக்கு சமூக வலைதளங்களில் நேரடியாக வீடியோக்களை பகிர புதிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, நிலா பகுதியில் இருந்து ரீல்ஸ் போன்ற குறும்பட வீடியோக்களை பதிவேற்ற முடியும் என நாசா அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த புதிய நடைமுறை மூலம், விண்வெளி வீரர்கள் தங்களின் தினசரி பணிகள் மற்றும் அனுபவங்களை உலகம் முழுவதும் உள்ள மக்களுடன் நேரடியாக பகிர முடியும். இதற்காக பாதுகாப்பான தகவல் பரிமாற்றம் மற்றும் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

விண்வெளி ஆர்வலர்கள் மற்றும் சமூக வலைதள பயனர்கள் இந்த அறிவிப்பை பெரும் ஆவலுடன் வரவேற்றுள்ளனர். இந்த முயற்சி, விண்வெளி ஆராய்ச்சியை பொதுமக்களுக்கு மேலும் நெருக்கமாக கொண்டு வரும் ஒரு புதிய பரிமாணமாக அமையும் என நாசா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# கோவையில் முதல் முறையாக லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டி

சர்வதேச அளவில் மூத்த கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்கும் லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் (Legends League Cricket) போட்டியின் 4-ஆவது சீசன் வரும் மார்ச் மாதம் நடைபெறும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த சீசனின் முக்கிய அம்சமாக, கோவையிலும் முதல் முறையாக போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

இதுவரை மூன்று சீசன்கள் வெற்றிகரமாக நடைபெற்றுள்ள லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியின் 4-ஆவது சீசன், ஜனவரி பிப்ரவரி மாதங்களில் நடைபெறும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நிர்வாக காரணங்களால் இந்த போட்டி தற்போது மார்ச் மாதத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

தகவல்களின் படி, இந்த சீசனின் போட்டிகள் பாட்னா, குவாலியர், அமிர்தசரஸ், கோவை, ஹல்த்வானி, ஆக்ரா ஆகிய நகரங்களில் நடைபெற உள்ளன. இதில் கோவை மற்றும் அமிர்தசரஸ் நகரங்களில் முதல் முறையாக லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக, லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட்டின் இணை நிறுவனர் ரமணா ரஹேஜா தெரிவித்துள்ளார்.

கடந்த சீசன்களில் கிறிஸ் கெய்ல், ஹர்பஜன் சிங், இர்பான் பதான், யூசுப் பதான், ஷிகர் தவான், தினேஷ் கார்த்திக், ராஸ் டெய்லர் உள்ளிட்ட மூத்த மற்றும் பிரபல கிரிக்கெட் வீரர்கள் இந்த தொடரில் விளையாடியுள்ளனர். இதனால் இந்த லீக் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கோவையில் உள்ள எஸ்என்ஆர் மைதானத்தில் இதற்கு முன்பு டிஎன்பிஎல் மற்றும் ரஞ்சி போட்டிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியும் அங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

போட்டிக்கான அட்டவணை, அணிகள், மைதானங்கள் மற்றும் வீரர்கள் பட்டியல் உள்ளிட்ட முழு விவரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# கே.எம்.சி.ஹெச் மருத்துவக் கல்லூரிக்கு சிறந்த ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான விருது

திகோவை ஹெரால்டு



கோவையின் முன்னணி மருத்துவ நிறுவனமான கேஎம்சிஹெச் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், 2026-ஆம் ஆண்டிற்கான ஏஎச்பிஐ குளோபல் கான்க்லேவ் மாநாட்டில், "சிறந்த ஆராய்ச்சி மற்றும் புதுமை" விருதைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

மும்பையில் உள்ள தாஜ் லேண்ட்ஸ் எண்ட் ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் கேஎம்சிஹெச் குழுமம் மொத்தம் மூன்று முக்கிய விருதுகளைத் தட்டிச் சென்றது.

சிறந்த ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகக்கான விருதை கேஎம்சிஹெச் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்வென்றது. சிறந்த மருத்துவச் செயல்பாடுகள் மற்றும் சிறந்த அவசரக் கால சிகிச்சை இந்த இரு விருதுகளையும் கேஎம்சிஹெச் மருத்துவமனை வென்றது.

இந்திய மருத்துவசேவை வழங்குநர்கள் சங்கத்தின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் கிர்தர் கியானி இந்த விருதை வழங்கினார். இதனை கேஎம்சிஹெச் மருத்துவக் கல்லூரி கல்வி திட்டத்திற்கான டீன் டாக்டர் எம். ஜி. ஸ்ரீதர் பெற்றுக்கொண்டார். கேஎம்சிஹெச் மருத்துவக் கல்லூரி செய்த சிறந்த மருத்துவ ஆராய்ச்சிகள், புதிய சிகிச்சை முறைகள் மற்றும் மாணவர்களிடையே ஆராய்ச்சி ஆர்வத்தை ஊக்குவித்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனை குறித்து கேஎம்சிஹெச் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் நல்லா ஜி. பழனிசாமி கூறுகையில், இந்த அங்கீகாரம் எங்களது மருத்துவ முன்னேற்றத்திற்கு கிடைத்த சான்று.

இது நிறுவனத்திற்கான விருது மட்டுமல்ல, நோயாளிகளுக்கு சிறந்த தீர்வுகளைக் காண உழைக்கும் எங்களது ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கு கிடைத்த அங்கீகாரம் எனத் தெரிவித்தார்.

கேஎம்சிஹெச் செயல் இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி கேஎம்சிஹெச் மருத்துவக் கல்லூரிகக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், நவீன மருத்துவத்திற்கு ஆராய்ச்சியே முதுகெலும்பு என்றும், இச்சாதனை தங்களை இன்னும் சிறப்பாகச் செயல்படத் தூண்டுவதாகவும் குறிப்பிட்டார்.

# வாட்ஸ்அப் சப்போர்ட் என கூறி நூதன மோசடி

## காவல்துறை எச்சரிக்கை

வாட்ஸ்அப் பயனர்களை குறிவைத்து புதிய வகை ஆன்லைன் மோசடி அதிகரித்து வருவதாக கோவை மாநகர காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

"Hi... நான் WhatsApp Support பேசுகிறேன்" என கூறி குறுஞ்செய்தி அனுப்பி, பயனர்களின் தனிப்பட்ட தகவல்களை திருட முயற்சிப்பதே இந்த மோசடியின் புதிய வடிவமாகும்.




இவ்வாறு வரும் செய்திகளை எந்தச் சூழலிலும் நம்பக்கூடாது என்றும், அந்த எண்ணை உடனடியாக பிளாக் செய்து புகார் அளிக்க வேண்டும் என்றும் காவல்துறை அறிவுறுத்தியுள்ளது. வாட்ஸ்அப் நிறுவனம் பயனர்களை நேரடியாக தொடர்பு கொள்ளாது என்பதையும் மக்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த மோசடி மூலம் வங்கி விவரங்கள், ஓடிபி எண்கள் உள்ளிட்ட முக்கிய தகவல்களைப் பெற முயற்சிக்கப்படுவதாகவும், இதனால் நிதி மோசடி ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்திற்குரிய செய்தி வந்தால் 1930 என்ற சைபர் கிரைம் உதவி எண்ணில் அல்லது cybercrime.gov.in இணையதளத்தில் புகார் அளிக்கலாம் என காவல்துறை தெரிவித்துள்ளது.

# குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா




கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், புதுடெல்லி மற்றும் சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களுக்குப் பாராட்டு விழா, கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

எஸ்.என்.ஆர்., சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை வகித்து, தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகளை வாழ்த்திப் பேசினார். ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் வரவேற்றுப் பேசினார்.

அதைத்தொடர்ந்து புதுடெல்லி குடியரசு தினவிழா அணிவகுப்பில், நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் பங்கேற்ற பி.காம். கணக்கியல் மற்றும் நிதியியல் துறை இரண்டாமாண்டு மாணவர் எஸ்.தர்ஷன், சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் பங்கேற்ற பி.காம். கணக்கியல் மற்றும் நிதியியல் துறை இரண்டாமாண்டு மாணவி பி.ஸ்வாதி, தேசிய மாணவர் படை சார்பில் பங்கேற்ற பி.எஸ்.சி., மின்னணுவியல் மூன்றாமாண்டு மாணவி ஆர்.சந்தியா, பி.காம். சி.ஏ., இரண்டாமாண்டு மாணவர் எஸ்.ஆகாஷ் ஆகியோருக்கு பரிசுகள் வழங்கிப்பாராட்டப்பட்டனர்.

இதேபோல் புதுடெல்லியில் நடைபெற்ற அகில இந்திய தால்சைனிக் முகாமில் பங்கேற்ற, பி.எஸ்சி., கணினி அறிவியல் மூன்றாமாண்டு மாணவி எம்.திவ்யா ஸ்ரீ லட்சுமி, மஹாராஷ்டிராவில் நடைபெற்ற தேசிய மாணவர் படை இயக்குநரகங்களுக்கு இடையிலான துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் பங்கேற்ற பி.காம். சி.ஏ., இரண்டாமாண்டு மாணவி என்.ஜனனி ஆகியோரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். அதைத்தொடர்ந்து மாணவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

# பிப்ரவரி 14ம் தேதி தனுசுக்கு 2வது திருமணம்?



நடிகர் தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் விவாகரத்துக்குப் பிறகு, தனுஷ் தற்போது நடிகை மிருணாள் தாகூரை காதலிப்பதாக கிசுகிசுக்கள் எழுந்துள்ளன.

கடந்த சில நாட்களாக சமூக வலைதளங்களில் ஹாட் டாபிக்காக வலம் வருவது நடிகர் தனுஷின் இரண்டாவது திருமணம் குறித்த செய்திகள் தான். குறிப்பாக, பாலிவுட் நடிகை மிருணாள் தாகூருடன் தனுஷ் காதலில் இருப்பதாகவும், இருவரும் வரும் பிப்ரவரி 14-ம் தேதி திருமண பந்தத்தில் இணையப் போவதாகவும் வெளியாகிவரும் தகவல்கள் ரசிகர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் திரையுலகின் நட்சத்திர ஜோடிகளாக வலம் வந்த தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த், கடந்த 2022-ம் ஆண்டு ஜனவரி 17-ம் தேதி தங்களின் பிரிவை அதிகாரப்பூர்வமாக அறிவித்தனர். 18 ஆண்டுகால திருமண வாழ்க்கைக்குப் பிறகு அவர்கள் எடுத்த இந்த முடிவு ஒட்டுமொத்த திரையுலகையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. பல கட்ட சமரச முயற்சிகளுக்குப் பிறகு, 2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விவாகரத்து கோரி நீதிமன்றத்தை நாடினர்.

நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு, 2024 நவம்பர் 27-ம் தேதி தனுஷ் மற்றும் ஐஸ்வர்யாவுக்கு விவாகரத்து வழங்கப் பட்டது.

விவாகரத்து அறிவிப்புக்கு பிறகு தனுஷ் தனது திரைப்பயணத்தில் தீவிரமாக கவனம் செலுத்தி வந்தார். 'ராயன்' படத்தின் வெற்றி மற்றும் 'இட்லி கடை', 'குபேரா' போன்ற படங்களின் பணிகளில் பிஸியாக இருந்த தனுஷ் மீது திடீரென புதிய கிசுகிசுக்கள் கிளம்பின. பாலிவுட்டில் இருந்து தென்னிந்திய சினிமா வரை கலக்கி வரும் நடிகை மிருணாள் தாகூருடன் தனுஷ் ரகசிய காதலில் இருப்பதாக செய்திகள் பரவின. 'சீதா ராமம்' படத்தின் மூலம் தென்னிந்திய ரசிகர்களின் மனதை வென்ற மிருணாள் தாகூரும், தனுஷும் நெருக்கமாக பழகி வருவதாக கூறப்பட்டது.

தற்போது கோலிவுட் மற்றும் பாலிவுட் வட்டாரங்களில் பேசப்படும் விஷயம் என்னவென்றால், வரும் பிப்ரவரி 14-ம் தேதி காதலர் தினத்தன்று தனுஷ் மற்றும் மிருணாள் தாகூர் இருவரும் ரகசியமாக திருமணம் செய்துகொள்ளப் போகிறார்கள் என்பதுதான். இந்த திருமணத்தில் மிகவும் நெருக்கமான உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே கலந்து கொள்ள உள்ளதாகவும், ஊடகங்களுக்கு அனுமதி கிடையாது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், இந்த செய்திகள் குறித்து மிருணாள் தாகூர் ஏற்கனவே ஒரு விளக்கத்தை அளித்திருந்தார். தனுஷ் தனக்கு ஒரு நல்ல நண்பர் மட்டுமே என்றும், தங்களுக்குள் காதல் ஏதும் இல்லை என்றும் அவர் மறுப்பு தெரிவித்திருந்தார்.

தனுஷ் தற்போது இயக்குநராகவும் நடிகராகவும் உச்சத்தில் இருக்கிறார். மறுபுறம் மிருணாள் தாகூர் பான்-இந்தியா லெவலில் கவனிக்கப்படும் நடிகையாக வளர்ந்து வருகிறார். இவர்கள் இருவரும் இணைந்தால் அது இந்திய சினிமாவிலேயே ஒரு மிகப்பெரிய பேசுபொருளாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.

வழக்கமாக தனுஷ் தனது தனிப்பட்ட வாழ்க்கை குறித்த செய்திகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால், காதலர் தினம் நெருங்கி வரும் வேளையில், இந்த 'ரகசிய திருமணம்' குறித்த செய்தி உண்மையா அல்லது வெறும் புரளியா என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

# கோவை வ.உ.சி. பூங்காவில் ரூ.1.94 கோடியில் நீச்சல் குளம்: பணிகள் தொடக்கம்

கோவை வ.உ.சி.பூங்கா வளாகத்தில் ரூ.1.94 கோடி மதிப்பில் நவீன நீச்சல் குளம் அமைப்பதற்கான முதல்கட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள வ.உ.சி.மைதானத்தைச் சுற்றி பல்வேறு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி வசதிகள் உள்ள நிலையில், பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இந்த நீச்சல் குளம் அமைக்கப்படுகிறது. 13.5 மீட்டர் அகலம், 25 மீட்டர் நீளத்தில் அமைக்கப்படும் இந்த நீச்சல் குளத்தின் ஆழம் 1.2 மீட்டர் முதல் 1.8 மீட்டர் வரை இருக்கும். ஆண்கள், பெண்களுக்கு தனித்தனி குளியல் மற்றும் உடை மாற்றும் அறைகள், சிசிடிவி கண்காணிப்பு, குழந்தைகளுக்கான சிறப்பு நீராடல் பகுதி, வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

ஒரு மணி நேரத்திற்கு 50 பேர் வீதம் தினமும் 500 பேர் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச தரத்தில் நீச்சல் போட்டிகள் நடத்தும் வகையில் இந்த குளம் அமைக்கப்படுவதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.




# ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு பரிசு வழங்கும் விழா



கோவை ஸ்ரீ சௌடேஸ்வரி அறக்கட்டளை நடத்தும் ஸ்ரீ சௌடேஸ்வரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பொங்கல் திருவிழா அறக்கட்டளையின் தலைவரும் பள்ளியின் தாளாளருமான சீனிவாசன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

இந்த பொங்கல் விழாவானது முன்னோர்கள் கிராமத்தில் கொண்டாடுவது போல் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விழாவின் முதல் நிகழ்ச்சியாக பொங்கல் வைத்து சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வழிபட்டனர். அதனைத்தொடர்ந்து பாண்டியாட்டம், பச்சகுதிரை, பரமபதம், பல்லாங்குழி, ஐந்து கல்லாட்டம், தொட்டு விளையாட்டு, கண்ணாமூச்சி, சிலம்பம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு செயலாளர் ரவிராஜ் கிருஷ்ணன், பொருளாளர் சண்முகம், துணைத் தலைவர்கள் சுப்பிரமணியன் செல்வராஜ், இணைச் செயலாளர்கள் ரபீந்திரநாத், மோகன் மற்றும் எம்ஜேஎஃப் சுபா சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பரிசுகள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# RAC டிக்கெட் கட்டணம் பாதியாகக் குறைய வாய்ப்பு

## ரயில் பயணிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி

இந்தியாவில் குறைந்த கட்டணத்தில் பயணம் செய்யமுடிவதால், தினமும் லட்சக்கணக்கான மக்கள் ரயில்களை நம்பி பயணம் செய்து வருகின்றனர். ஆனால், அதிகமான பயணிகள் காரணமாக ரயில் டிக்கெட்டுகளை முன்கூட்டியே முன்பதிவு செய்ய வேண்டிய சூழல் நிலவி வருகிறது. பெரும்பாலானநேரங்களில் முன்பதிவு தொடங்கிய சில நிமிடங்களிலேயே டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்து விடுகின்றன.

இந்நிலையில், ரயில் பயணிகளுக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் RAC டிக்கெட் கட்டணத்தை பாதியாகக் குறைக்க வேண்டும் என நாடாளுமன்ற பொது கணக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது.

விரைவு மற்றும் அதிவிரைவு ரயில்களில் RAC (உறுதிசெய்யப்பட்ட காத்திருப்பு) வசதி வழங்கப்படுகிறது.

ஒரு RAC டிக்கெட்டின் மூலம் ஒரே பெர்த்தில் இரண்டுபயணிகள்பயணம் செய்ய அனுமதிக்கப் படுகின்றனர்.

இருப்பினும், இரு பயணிகளிடமிருந்தும் தற்போதுமுழுக்கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

ஒரு பயணி தனது முன்பதிவு செய்யப்பட்ட டிக்கெட்டை ரத்து செய்யும் போது, அந்த இடம் காத்திருப்பு பட்டியலில் உள்ள இரண்டு பயணிகளுக்கு RAC டிக்கெட்டாக மாற்றப்படுகிறது. இதன் மூலம் இருவருக்கும் பகுதியளவுஇருக்கைவசதி மட்டுமே கிடைக்கிறது.

ஒரே பெர்த்தை இருவர் பகிர்ந்து பயணம் செய்யும் நிலையில், இருவரிடமிருந்தும் முழுக் கட்டணம் வசூலிப்பது நியாயமல்ல எனக் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற பொது கணக்குக்குழு, ஒவ்வொரு RAC பயணியிடமும் பாதி கட்டணமே வசூலிக்க வேண்டும் என பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரையை ரயில்வே நிர்வாகம் அமல்படுத்தினால், RAC டிக்கெட் கட்டணம் குறிப்பிடத்தக்க அளவில் குறையும்.

இதனுடன், நாட்டில் இயக்கப்படும் 478 அதிவிரைவுரயில்களில் 123 ரயில்கள் நிர்ணயிக்கப்பட்ட 55 கிலோமீட்டர் சராசரி வேகத்திற்கும் குறைவாக இயங்குகின்றன என்றும் குழு சுட்டிக்காட்டியுள்ளது. 55 கிலோமீட்டர் வேகத்தை எட்டாத ரயில்களை அதிவிரைவு ரயில்களாக வகைப்படுத்தக் கூடாது என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், அதிவிரைவு ரயில்களின் சராசரி வேகத்தை 100 கிலோமீட்டராக உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற பொது கணக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த பரிந்துரைகள் நடைமுறைக்கு வந்தால், ரயில் பயணிகளுக்கு கட்டண நிவாரணம் கிடைப்பதுடன், பயணத் தரமும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரேஷன் பொருட்களுக்கு பதிலாக நேரடி பணம் வழங்க மத்திய அரசு பரிசீலனை




பொது விநியோகத் திட்டத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், ரேஷன்கடைகளில்வழங்கப் படும் அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு மாற்றாக, பயனாளிகளுக்கு நேரடியாக பணம் வழங்கும் புதிய முறையை மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இந்த மாற்றம் மூலம் பயனாளிகளுக்கு அதிகவசதி, தேர்வுசுதந்திரம் மற்றும் வெளிப்படையான விநியோகம்கிடைக்கும் என அரசு தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புதிய திட்டத்தில் இ.ரூப்பி எனப்படும் டிஜிட்டல் வவுச்சர் முறை பயன் படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு மாதமும் பயனாளியின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு வவுச்சர் அனுப் பப்படும். அந்த வவுச்சரை பயன்படுத்தி தேவையான அத்தியாவசியப் பொருட் களை வாங்கவோ அல்லது நேரடியாக வங்கிக் கணக் கில் பணமாகப் பெற்றுக் கொள்ளவோ முடியும்.

குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் எண் ணிக்கையை அடிப்படை யாகக் கொண்டு வழங்கப் படும் தொகை நிர்ணயிக்கப் படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் மூலம் உண்மையில் தேவையுள்ள குடும்பங்களுக்கு சரியான அளவில் பொருளாதார ஆதரவு கிடைக்கும் வகையில் திட்டம் வடிவமைக்கப்படுவதாக கூறப்படுகிறது.

ரேஷன் விநியோகத்தில் நீண்ட காலமாக நிலவி வரும் முறைகேடுகள், பொருள் கடத்தல் மற்றும் இடைநிலையர் சிக்கல்கள் ஆகியவற்றை குறைப்பதே இந்த புதிய திட்டத்தின் முக்கிய நோக்கம்.

நேரடி பணம் அல்லது வவுச்சர் வழங்குவதன் மூலம் இடைநிலையர்கள் நீக்கப்பட்டு, பயனாளி களுக்கு முழுப் பலன் கிடைக்கும் என அரசு நம்பிக்கை தெரிவித்துள் ளது.

முதற்கட்டமாக, சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இந்த திட்டம் சோதனை முறையில் அமல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது. அந்த சோதனையின் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, நாடு முழுவதும் திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இந்த புதிய ரேஷன் மாற்றுத் திட்டம் வெற்றிக ரமாக அமல்பட்டால், இந்தியாவின் சமூக நல திட்டங்களில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையும் என பொருளா தார நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் வாழ்க்கையில் நேரடி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய இந்த முயற்சி, எதிர் காலத்தில் நலத்திட்டங் களின் செயல்பாட்டையே மாற்றக் கூடும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

# பிப்ரவரி 17-ம் தேதி தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர்: அன்றே இடைக்கால பட்ஜெட் தாக்கல்

தமிழ்நாடு சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 17ஆம் தேதி தொடங்கும் என சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் அளித்த பேட்டியில், அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு இடைக்கால பட்ஜெட்டை நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்வார் என்றார்.

மேலும், 202627ஆம் நிதியாண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மற்றும் கூடுதல் செலவுகளுக்கான மானியக் கோரிக்கைகள் 20ஆம் தேதி சட்டப்பேரவையில் வாசிக்கப்பட உள்ளன என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

சட்டப்பேரவை கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடைபெறும் என்பது அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

அதேபோல், சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புவதற்கான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பான கடைசி கூட்டத்தொடராக இருப்பதால், இந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் சில முக்கிய அறிவிப்புகள் வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது.

# உலகின் மிகச்சிறந்த ஆசிரியை விருதை வென்ற இந்திய ஆசிரியை



தி கோவை ஹெரால்டு

துபாயில், நடந்த உலக அரசாங்க உச்சிமாநாட்டில் ஆசிரியர்களுக்கான மிக உயரிய விருதாகக் கருதப்படும் 'உலகின் சிறந்த ஆசிரியர் பரிசு' இந்தியாவைச் சேர்ந்த ரூபிள் நாகி என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

உலகின் சிறந்த ஆசிரியருக்கான பரிசு கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட வர்க்கி அறக் கட்டளை நிறுவனத்தால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. கல்வியில் சிறந்த சேவை வழங்கும் ஆசிரியர்களுக்கு 1 மில்லியன் டாலர் பரிசுத் தொகை வழங்கப்படும்.

அந்த வகையில் இந்தாண்டு, நகர்ப்புற குடிசைப்பகுதிகளில் வாழும்குழந்தைகளிடையே கல்வி அணுகலை மாற்றியமைத்ததற்காக இந்தியாவைச் சேர்ந்த ரூபிள் நாகி என்பவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஜம்மு காஷ்மீரில் பிறந்த ரூபிள் நாகி, லண்டனில் கல்வி பயின்றவர்.

சர்வதேச அளவிலான புகழ்பெற்ற கலைஞர் மற்றும் சமூகச் செயல்பாட்டாளரான இவர், இந்தியாவின் குடிசைப் பகுதிகளில் உள்ள சுவர்களில் கல்வி சார்ந்த சித்திரங்களை வரைந்து, அவற்றைத் திறந்தவெளி வகுப்பறைகளாக மாற்றியிருக்கிறார்.

இதன் மூலம், எளிய முறையில் வாசிப்பு, எழுதுதல் மற்றும் கணித அறிவைகுழந்தைகளுக்குக் கொண்டுசென்றிருக்கிறார். தவிர, 'ரூபிள் நாகி கலை அறக்கட்டளை' மூலம் இந்தியா முழுவதும் 800-க்கும் மேற்பட்ட கற்றல் மையங்களை உருவாக்கி இருக்கிறார்.

10 லட்சத்திற்கும் அதிகமான குழந்தை களுக்குக் கலை சார்ந்த கல்வியை வழங்கி இருக்கிறார்.

# இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்: தன்னம்பிக்கையின் வெற்றி!

தி கோவை ஹெரால்டு

■ வ.மு.முரளி

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்திய- அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் நிறைவேற உள்ளதாக, கடந்த 2026 பிப்.2ஆம் தேதி அமெரிக்கா அறிவித்திருக்கிறது. இது தொடர்பான கூட்டறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் பயன்கள் இப்போதே கிடைக்கத் தொடங்கிவிட்டன.



### அமெரிக்காவுடனான உறவில் நெருடல்:

உள்நாட்டு பெட்ரோலியத் தேவையை நிர்வகிக்க இந்தியா பல்வேறு நாடுகளிலிருந்து கச்சா எண்ணையை வாங்கி வருகிறது. குறிப்பாக ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளிலிருந்துகுறைந்தவிலையில் கச்சா எண்ணை வாங்குவதால் இந்தியாவின் பெட்ரோலியத் தேவையால் ஏற்படும் பொருளாதார அழுத்தம்கட்டுக்குள் இருந்துவந்தது. ஆனால், ரஷ்யாவில் இருந்து கச்சா எண்ணை இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா 2022ஆம் அண்டுமுதலே நிர்பந்தித்து வந்தது. உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு பொருளாதாரரீதியாக சிக்கலை ஏற்படுத்த இந்த பொருளாதாரத்தடை உதவும் என்பது அமெரிக்காவின் எதிர்பார்ப்பு. ஆனால், இந்தியா அதனை செவி மடுக்கவில்லை.

இந்நிலையில்கடந்த2025ஆகஸ்ட் முதல் தேதி, ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணை வாங்குவதால், அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் இந்தியாவின் பொருட்களுக்கு 25 % பரஸ்பர வரி விதிப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்தார். ஆயினும் இந்தியா அசைந்து கொடுக்கவில்லை. எனவே, இந்தியா மீது மேலும் 25 % அபராத வரி விதிப்பதாக ஆகஸ்ட் 27இல் டிரம்ப் அறிவித்தார். "இந்தியா தொடர்ந்து ரஷ்ய எண்ணையை வாங்கினால் இந்தியப்பொருட்கள் மீதான் வரியை 200 % வரை மேலும் அதிகரிப்பேன்" என்றும் அவர் எச்சரித்தார்.

இதன் காரணமாக அமெரிக்காவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையாகப் பாதிக்கப் பட்டது. குறிப்பாக இந்திய ஜவுளித் துறையில் பெரும் தேக்கம் ஏற்பட்டது. ஆயினும் இந்திய அரசு உடனடி எதிவினையைக் காட்டாமல் அமைதி காத்தது. எனவே அமெரிக்காவுக்கு அடிபணித்து விட்டதாக, இந்திய அரசு மீது எதிர்க்கட்சிகள் கடும் தாக்குதல்களை நிகழ்த்தி வந்தன.

### தன்னம்பிக்கையான அணுகுமுறை:

இந்திய வெளியுறவுத் துறையும் வர்த்தக அமைச்சகமும் அமெரிக்காவுடன்தொடர்ந்துபேச்சுநடத்திவந்தன. அதன் விளைவாக தற்போது, 2025 ஆகஸ்ட் 1க்கு முந்தைய நிலைக்கு அமெரிக்காவின் வரிவிதிப்பு (18 %) திரும்பியுள்ளது. இதனை அமெரிக்க அதிபர் டிரம்பே கடந்த பிப். 2ஆம் தேதி அறிவித்திருக்கிறார். இந்த அதிரடி மாற்றத்திற்குக் காரணமாக பல்வேறு அம்சங்கள் இருந்துள்ளன.

இந்தியாவின் ராஜதந்திர அமைதி, ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் இந்தியாவின் ஒப்பந்தம், அமெரிக்க நெருக்கடிக்கு அஞ்சாமல் தலைநிமிர்ந்து நின்றது, அதே சமயம் அமெரிக்கா போல எடுத்தேன் கவிழ்த்தேன் பாணியைக் கடைபிடிக்காமல் நிதானம் காத்தது ஆகியவை, இந்தியாவின் தன்னம்பிக்கையை உலகிற்கு வெளிப்படுத்தின.

இதே காலகட்டத்தில் இந்தியப் பொருட்கள் மீதான வரிவிதிப்பு உள்நாட்டு விநியோகச் சங்கிலியில் ஏற்படுத்திய மாற்றத்தால் அமெரிக்கா சிக்கலை உணரத் தொடங்கியது. தவிர, இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்துவந்த அமெரிக்க நிறுவனங்களே, தங்கள் நாட்டு அரசிடம் இந்தியா மீதான வரியைக் குறைக்குமாறு நிர்பந்தித்து வந்தன. இதன் விளைவாகவே தற்போது அமெரிக்க அரசு தனது நிலையிலிருந்து இறங்கி வந்திருக்கிறது.

### முக்கியமான மாற்றங்கள்:

புதிய வர்த்தக ஒப்பந்தம் மூலமாக இந்தியா- அமெரிக்கா நாடுகளிடையிலான வரிவிதிப்புக் கட்டமைப்பு புது வடிவம் பெற்றுள்ளது. இனி அது 18 % ஆக இருக்கும். அடுத்து, இருதரப்புசந்தை விரிவாக்கத்திற்கான வாய்ப்புகள் எளிதாகும். இது அமெரிக்காவில் இந்திய ஏற்றுமதியாளர்களின் வர்த்தக வாய்ப்புகளைப் பெருக்கும்.

பரஸ்பர வரி 18 % ஆக இருந்தது, கூடுதல் வரி விதிப்பு (18 + 7 = 25 %), அபராத வரி விதிப்பு (25 %) ஆகியவை மூலமாக 50 % என்ற அபாய நிலையை எட்டி இருந்தது. பொதுவாகவே, அமெரிக்கா இவ்வாறு உயர்த்திய வரியினங்களை மிகக் குறுகியகாலத்தில் குறைத்ததில்லை. ஆனால், அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமாக இந்தியா இதனை சாதித்திருக்கிறது.

அதேசமயம், இந்தியா அமெரிக்காவின் நெருக்குதல்களை லாகவமாகக் கையாண்டு, இறையாண்மையையும் தற்காத்துக் கொண்டுள்ளது. குறிப்பாக, அமெரிக்க வேளாண் பொருட்களுக்கு இந்தியச் சந்தையை கட்டுப்பாடின்றித் திறந்துவிட வேண்டும் என்பது அமெரிக்காவின் எதிர்ப்பார்ப்புகளுள் ஒன்றாக இருந்தது. அதற்கு இந்தியா கடைசிவரை ஒப்புக் கொள்ளவில்லை. வர்த்தக லாபத்திற்காக சுயமரியாதையையும் இந்திய இறையாண்மையையும் அடகு வைக்க இந்தியா தயாரில்லை என்ற சேதி அமெரிக்காவுக்கு மட்டுமல்லாது, உலகிற்கும் தெளிவாகச் சொல்லப்பட்டது. இது இந்திய அரசியல் தலைமையின் விவேகத்திற்கும் மனஉறுதிக்கும் எடுத்துக்காட்டாக வெளிப்பட்டது.

### பலன் பெறும் துறைகள்:

இந்தியா அமெரிக்காவுக்கு ஜவுளி, ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், மின்னணுப் பொருட் கள், ஆபரணங்கள், எஃகு, மருந்துப் பொருட்கள், பொறியியல் தயாரிப்புகள் ஆகியவற்றை பெருமளவில் ஏற்றுமதி செய்கிறது. அமெரிக்காவின் புதிய அறிவிப்பால், இத் துறைகளில் ஏற்றுமதி அதிகரிக்கும். ஆகஸ்ட் மாதத்திலிருந்து தேக்கம் அடைந்திருந்த இந்திய ஏற்றுமதி மீண்டும் சூடு பிடிக்கும். குறிப்பாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதிசெய்யும் நாடுகளில் பங்களாதேஷ், சீனா, வியட்நாம் போன்ற போட்டி நாடுகளால் இந்தியாவின் வர்த்தக வாய்ப்புகள் பறிக்கப்பட்ட நிலை மாறும்.

அமெரிக்க அதிபரின் அறிவிப்பு உடனடியாக அமலுக்கு வந்துவிட்டது. அதன் உடனடி விளைவாக இந்திய பங்குச் சந்தைகளில் மிகப் பெரிய ஏற்றம் அன்று (பிப். 2) காணப்பட்டது. நிஃப்டி, சென்செக்ஸ் புள்ளிவிவரங்கள் அமெரிக்க ஏற்றுமதி குறித்த ஆக்கபூர்வமான அறிவிப்பால் குதிரைப் பாய்ச்சல் கண்டன. அது மட்டுமல்ல, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் 119 பைசாவிலிருந்து 90.3 பைசாவுக்கு மாற்றம் கண்டு வலுவானது. இது முதலீட்டாளர்களின் நம்பிக்கை மீண்டதன் எதிரொலியாகும்.

### வர்த்தக ஒப்பந்தத்தின் லாபங்கள்:

2030ஆம் ஆண்டுக்குள் அமெரிக்காவுக்கான இந்திய ஏற்றுமதி 500 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.45 லட்சம் கோடி) ஆக வேண்டும் என்ற இலக்கு (மிஷன் 500) ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்த இலக்கை நோக்கிய பயணத்தில் ஒரு தேக்க நிலை கடந்த 6 மாதங்களாக (2025 ஆகஸ்ட் 2026 ஜனவரி) நிலவினாலும், புதிய ஒப்பந்தம் காரணமாக, நமது ஏற்றுமதி கூடுதல் வேகம் பெறத் தொடங்கிவிட்டது..

இந்திய இறையாண்மையை அடகு வைக்காமல், எவ்வித நெருக்கடிக்கும் அடிபணியாமல், இந்தியா தனது நிதானமான அணுகுமுறையாலும், பொறுமையாலும் இதனைச் சாதித்துள்ளது. உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு இதனால் மேலும் அதிகரித்துள்ளது.

சவால்களை சாதனையாக்கும் இந்தியாவின் திறன் காரணமாக, ஐரோப்பிய யூனியன் போன்ற புதிய சந்தை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. பின்னலாடைநகரானதிருப்பூர்போன்ற நகரங்கள் புதிய இலக்குகளைத் தேடத் தொடங்கிவிட்டன. இது எதிர்காலத்தில் இந்தியாவை மிரட்ட முயற்சிப்போருக்கு எச்சரிக்கையாக இருக்கும்.

ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் மூலமாக, சில துறைகளில் மட்டுமே ஏற்றுமதி செய்யும் நிலைக்கு மாற்றும் கண்டறியப்பட்டுள்ளது. தடைக்கற்களைக் கொண்டே பாதை அமைக்கும் இந்தியாவின் சுயசார்பும், உறுதியான அரசியல் தலைமையும் இந்திய வர்த்தகத்தை அடுத்தகட்ட வளர்ச்சி நோக்கிக் கொண்டு சென்றுள்ளன.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)